






























உதயம் 1403 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 24, 2023

## "Once, while attempting to cross a street in Scarborough with my Grandmother, I experienced mental trauma. It made me to get into Municipal Politics."

**- Scarborough North City Councilor Jamaal Myers**

# எனது பாட்டியோடு ஒரு தடவை ஸ்காபுறோ வீதி ஒன்றை நான் கடக்க முற்பட்ட போது ஏற்பட்ட மனப் பாதிப்பே என்னை மாநகராட்சி அரசியலுக்கு அழைத்துச் சென்றது

### கனடா உதயன் பிரதம ஆசிரியருக்கு வழங்கிய பேட்டியில் ஸ்காபுறோ வடக்கு நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

"சில வருடங்களுக்கு முன்னர் எனது பாட்டியோடு ஒரு தடவை ஸ்காபுறோ வீதி ஒன்றை நான் கடக்க முற்பட்ட போது ஏற்பட்ட மனப் பாதிப்பே என்னை மாநகராட்சி அரசியலுக்கு அழைத்துச் சென்றது. அன்று நாம் இருவரும் வீதியைக் கடக்க முயன்றோம். நான் அழைத்தும் எனது பாட்டி வீதியைக் கடக்க விரும்பவில்லை. ஏன் என்று கேட்டேன். இங்கு பாதுகாப்பாக வீதியைக் கடக்கும் சரியான அறிவிப்பு எதுவும் இல்லை என்றார்.

(உள்ளே தொடர்ச்சி 13ம் பக்கத்தில்)



# RE/MAX ACE Brokerage Inc வீடு விற்பனை முகவர் நிறுவனத்தில் விற்பனைப் பிரதிநிதியாக இணைந்துள்ள CAMSONICS அதிபர் ரஜீவ் செபராசா

கனடாவில் நன்கு அறியப்பெற்ற **RE/MAX ACE Brokerage Inc** வீடு விற்பனை முகவர் நிறுவனத்தில் பல விற்பனைப் பிரதிநிதிகள் இணைந்து தீவிரமாக தங்கள் துறையில் செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறான ஒரு நிறுவனத்தில் தானும் ஒரு விற்பனைப் பிரதிநிதியாக இணைந்துள்ள **CAMSONICS SECURITY SYSTEMS INC** அதிபர் ரஜீவ் செபராசா அவர்களை மேற்படி நிறுவனத்தின் பங்காளர்களில் மூவர் வரவேற்று தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

(உள்ளே 3ம் பக்கத்தில் தொடர்ச்சி)


























உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி

## கனடா உதயன் பத்திரிக்கை - ஐந்தாம் அத்தியாயம்

## “கிளிநொச்சியில் பிரபாவுடன் சந்திப்பு”



• **நோ**ர்வேயை அவர் கூட்டி வந்து இருக்கலாம். ஆனால், நாங்கள் பேச வேண்டுமே என்று பிரபா சொன்னார்.

• கருணா அம்மானை எங்கே ஒளித்து வைத்திருக்கிறார்கள் என எங்களுக்கு தெரியும் என்றும் சொன்னார்.

• அவருடனான கடைசி சந்திப்பு என நான் அப்போது நினைக்கவில்லை.

• பிரபாவை அடுத்து, என் பார்வையை கவர்ந்தவர், பொட்டு அம்மான்.

<காலகட்டம்: 2004 - ரணிலின் போர் நிறுத்த கால ஆட்சியின் இறுதி கட்டம். சந்திரிக்கா ஜனாதிபதி. ரணில் பிரதமர். ரணிலின் சில முக்கிய அமைச்சுக்களை சந்திரிக்கா பறித்த சூடான சூழ்நிலை.>

ஜனாதிபதி சந்திரிகா ஒரு விஷயம் பேச உங்களை அழைக்கிறார், என நண்பர் லசந்த அழகியவண்ண எம்பி எனக்கு தொலைபேசியில் கூறி விட்டு சற்று நேரத்தில் வந்து சந்திக்கிறேன் என்றார்.

அந்நேரம் லசந்த, சந்திரிகாவுக்கு மிகவும் நெருக்கமானவர். அவரது மனைவி ஜனாதிபதி செயலகத்தில் பணி புரிந்தார்.

சொன்னபடி வந்த லசந்த, தனது தொலைபேசியில், ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு அழைப்பு எடுத்து என்னிடம் கொடுத்தார். ஜனாதிபதி அழைப்பில் வந்தார்.

“மனோ, நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்”

“என்ன, ஜனாதிபதி அவர்களே?”

“கிளிநொச்சி போய், பிரபாகரனை சந்தித்து எனது ஒரு செய்தியை அவருக்கு நீங்கள் கூற வேண்டும்.”

“பிரபாவுடன், ரணில் பேசுகிறார் என்று கூறித்தானே, நீங்கள் நானும் இடம் பெற்றுள்ள எங்கள் ரணில் அரசாங்கத்தை விமர்சிக்கிறீர்கள். மூன்று அமைச்சுகளையும் பறித்து விட்டீர்கள்.”



“அது. தென்னிலங்கையின் எங்கள் கட்சிகளின் அரசியல். அதுபற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்”

“நான் கவலைப்பட போவதில்லை. ஏனெனில் அது எனக்கு நன்கு தெரியும். பிரபாகரன் கேட்பாரே”

“அவருக்குத்தான் இந்த பதிலை கூறுகிறேன். நாளை இரவு வீட்டுக்கு லசந்தவுடன் வாருங்கள்.”

அடுத்த நாள் ஜனாதிபதி மாளிகைக்கு இரவில் போனேன்.

நேரடியாக விஷயத்துக்கு வந்த சந்திரிக்கா, தான் ரணில் செய்து வந்த சமாதான பேச்சுவார்த்தையை தொடர விரும்புவதாகவும், ஏற்பாட்டாளர் நோர்வேயை தானே முதலில் இலங்கைக்கு கூட்டி வந்ததாகவும், தென்னிலங்கை சிங்கள கட்சிகளின் கட்சி அரசியல் சண்டைகளை கணக்கில் எடுக்க வேண்டாம் என்றும், தான் பேச்சுவார்த்தைகளுக்கு தயார் என்றும், புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் கூறி, பதில் பெற்று வரும்படி கூறினார்.

சமாதான பேச்சுகளுக்கு எதிராக ரணிலின் ஆட்சியை கடுமையாக எதிர்த்த சந்திரிகாவை, சமாதானத்துக்கு எதிரானவர் என நினைத்துக்கொண்டு புலிகள் சண்டையை மீண்டும் ஆரம்பித்து விடுவார்கள் என சந்திரிக்கா நினைத்திருக்க கூடும்.

நாட்டின் ஜனாதிபதி கூறுகிறார். ஆகவே போனேன். ஆனால், இந்த கிளிநொச்சி விஜயம் பின்னாளில் எனக்கு தென்னிலங்கையில் பெரிய சிங்கள தேசியவாத எதிர்ப்பை ஏற்படுத்த போகிறது என நான் நினைக்கவே இல்லை.

இரண்டு நாளில், சந்திரிகாவின் “சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு நான் தயார். நீங்கள் தயாரா?” “தென்னிலங்கை பெரும்பான்மை கட்சிகளின் கட்சி அரசியல் சண்டைகளை கணக்கில் எடுக்க வேண்டாம்!” “யார் என்னை நாடி வந்தாலும் அடைக்கலம் தருவேன்!” ஆகிய செய்திகளை எடுத்துக்கொண்டு தூதுவனாக நான், கொழும்பிலிருந்து கட்சி குழுவினருடன் அதிகாலையில் கிளம்பி காலையில் கிளிநொச்சி சென்றடைந்தேன்.

சமாதான செயலகத்தில், என்னை வரவேற்ற தமிழ்செல்வன் அங்கே இருக்கும் விருந்தினர் இல்லத்தில் எம்மை தங்கும்படி கேட்டுக்கொண்டார்.

தமிழ் செல்வனை அந்த சமாதான செயலகத்தில் பலமுறை அதற்கு முன்னரே நான் சந்தித்திருந்த காரணத்தினாலே நானும், தமிழ் செல்வனும் நல்ல அரசியல் நண்பர்களாக மாறியிருந்தோம்.

சிறிது நேரத்திற்கு பிறகு அங்கே கிளிநொச்சியிலேயே இருந்த மற்றுமொரு விருந்தினர் இல்லத்திற்கு புலிகள் எம்மை அழைத்து சென்றார்கள். அங்கு புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்தார்.

அன்றுதான் நானும், பிரபாகரனும் முதல் முதலாக சந்தித்துக்கொண்டோம். என்னை கண்டவுடன், சிரித்தபடி, கைலாகு கொடுத்து, தோளை தொட்டு வரவேற்றார்.

அமர்ந்து பேச தொடங்கினோம். அங்கே புலிகளின் தலைவருடன் தமிழ்ச்செல்வன், பொட்டு அம்மான், நடேசன், புலித்தேவன் போன்ற ஏனைய புலி பிரமுகர்களும் இருந்தார்கள்.



பிரபாவை அடுத்து, அங்கே என் பார்வையை கவர்ந்தவர், பொட்டு அம்மான். எனக்கு ஞாபகம் இருக்கும் வரையில், அவர் சிவந்த நிறத்தில், உயரமாக, அடர்ந்த கறுத்த மீசையுடன் ஒரு மலையாள சினிமா நடிகர் மாதிரி தோற்றமளித்தார்.

சந்திரிகாவின் செய்தியை நான் பிரபாகரனிடம் கூறினேன்.

“நோர்வேயை நானே இலங்கைக்கு கூட்டி வந்தேன். எனவே தொடர்ந்து பேச தயார். பேச விரும்புகிறேன். கொழும்பின் கட்சி அரசியலை கணக்கில் எடுக்க வேண்டாம். இதை பிரதானமாக உங்களிடம் சொல்ல சொன்னார்” என்றேன்.

“சந்திரிகா பேசுவதானால் பேசலாம். சண்டை இடுவதானாலும் சண்டை இடலாம்.” என சிரித்தபடி பிரபாகரன் பதில் சொன்னார்.

மேலும், “கொழும்பில் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசியல் விளையாட்டுகள் பற்றி எனக்கு அக்கறை கிடையாது. ரணிலும், சந்திரிகாவும் எனக்கு ஒன்றுதான். இதை அவரிடம் சொல்லுங்கள்” என்று பிரபாகரன் என்னிடம் கூறினார்.

மேலும், “நோர்வேயை அவர் கூட்டி வந்து இருக்கலாம். ஆனால், நாங்கள் பேச வேண்டுமே. இல்லாவிட்டால் நோர்வேக்கு வேலை கிடையாது”. என்று சொல்லி சிரித்தார்.

அச்சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலம் நிகழ்ந்தது. சந்திப்பின் போது பிரபாகரன் அதிகமாக வாய்விட்டு சிரித்துக் கொண்டிருந்தார். நகைச்சுவையாக பல விடயங்களை பேசினார்.

அதுவரை அவரைப்பற்றி, அவர் ஒரு கடினமான மனிதராக இருக்க கூடும் என நினைத்திருந்தேன்.

அன்று கடினத்துக்கு அப்பால், அவருக்கு நகைச்சுவை உணர்வும் நிறைய இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டேன். நானும் அதே மாதிரி நகைச்சுவை உணர்வாளன் என்ற காரணத்தினாலே இருவரும் பேச வந்த விடயத்தை விட்டுவிட்டு வேறு விடயங்களை பற்றியும் பேசி சிரித்தோம்.

அங்கு இன்னொன்றையும் கவனித்தேன். பிரபாகரனின் இரு புறமும் அமர்ந்திருந்த ஏனைய புலி பிரமுகர்கள் தாமாக எதுவும் பேசவில்லை. நானும், பிரபாகரனும் பேசி சிரிப்பதை கண்டு அவர்களும் சத்தமில்லாமல் சிரித்துக்கொண்டார்கள். அதற்கு மேல் பிரபாகரன் ஏதாவது அவர்களிடம் கேட்டால் மாத்திரம் பதில் கூறினார்கள்.



சினிமா பற்றி இடையில் திடீரென பேசினார். எனது தந்தையின் இலங்கை தமிழ் படங்களை தான் விருப்பத்துடன் பார்த்திருப்பதாகவும், நம் நாட்டு தனித்துவத்தை பிரதிபலிக்கும் சினிமாவை கட்டியெழுப்பியவர் என்ற முறையிலே அவர் மீது தனக்கு மரியாதை இருப்பதாகவும் பிரபாகரன் என்னிடம் கூறினார்.

அடுத்து அவர் கூறியது எனக்கு மகிழ்ச்சியான ஆச்சரியம் அளித்தது. “ஸ்ரீலங்காவுக்கு வந்த நடிகர் சிவாஜி கணேசனுடன், உங்கள் தந்தை இலங்கை சினிமா சார்பில் சச்சரவு பட்டதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது” என்றார்.

தமிழக சினிமா மீதும், தமிழக கதை நாவல் இலக்கியம் மீதும் தனக்கு இருக்கும் அதீத பற்றை சுருக்கமாக சொல்லிவிட்டு, “ஆனால், நமக்கென்று மண்வாசனை இருக்கிறதல்லவா? அது ஒட்டுமொத்த உலக தமிழுலகில் தனித்துவ அங்கம் அல்லவா” என்றார்.

கருணா அம்மான் பற்றி சந்திரிகா கூறியதையும் நான் பிரபாகரனிடம் கூறினேன். “கருணா அம்மான் வெளியில் வந்தால் அவருக்கு அடைக்கலம் தருவேன். அதை உங்களுக்கு எதிரானதாக எடுத்துக்கொள்ள கூடாது என்று சந்திரிகா கூறுகிறார்”.

“அதெப்படி..? அது, எங்களுக்கு எதிரான செயற்பாடுதான் என்று சந்திரிகாவிடம் சொல்லுங்கள்” என காரசாரமான விடயத்தை சிரித்தபடியே சொன்னார்.

அடுத்த விடயத்தை நான் சொல்ல விரும்பி இருக்கவில்லை. ஆனாலும், ஒரு தூதுவன் என்ற முறையில் நேர்மை இருக்கவேண்டுமே. ஆகவே சொன்னேன்.

“அதைபோல் நீங்கள் அவரிடம் வந்தாலும் கூட உங்களையும் வரவேற்று ஏற்றுக்கொள்வார் என சந்திரிகா கூறினார்”.

ஒரு வினாடியும் தாமதியாமல் பதில் வந்தது.

“அப்படி ஒருபோதும் நடக்காது. அதற்கான அவசியமும் ஏற்படாது. சந்திரிகாவிடம் கூறுங்கள்.” என பிரபாகரன், இப்போது சிரிக்காமல் சொன்னார்.

அதற்கு பிறகு மீண்டும் சிரிக்க, சிரிக்க நகைச்சுவையாக பேசினார். கருணா அம்மானை பற்றி பேசினார்.

“கருணா இப்போது கொழும்பிலேதான் ஒளிந்து இருக்கின்றார் என எங்களுக்கு தெரியும். அவர் எங்கு இருக்கிறார் என்று ஜனாதிபதி சந்திரிகாவிற்கு தெரியாதா? என்ன...? ரணிலிடம் கேட்க சொல்லுங்கள். ரணிலுக்கு தெரியும் என்பது எங்களுக்கு தெரியும். அவர் கருணாவுக்கு ஏற்கனவே அடைக்கலம் கொடுத்து விட்டார்” என்று மீண்டும் சிரிப்புடன் பிரபாகரன் பேசத்தொடங்கினார்.

அப்புறம் ரணிலை பற்றி பேச்சு ஆரம்பமாகியது. “எப்படி இருக்கின்றார் உங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க?” என்று கண்ணை இமைத்தபடி கேட்டார்.

“அவர் கருணா அம்மானை எங்கே ஒளித்து வைத்திருக்கின்றார் என்றும், அவர் எப்படி கொழும்புக்கு வந்தார் என்றும் எங்களுக்கு தெரியும்” என்று சொல்லி நிறுத்தி விட்டு, “யாரவன் (ர்)...?” என தன் உதவியாளர்கள் பக்கம் திரும்பி கேட்டார்.

“மௌலானா” என்று யாரோ பதில் கூறினார்கள். “எங்களுக்கு தெரியும் என அவரிடம் கூறுங்கள்.” என்றார்.

“நான் இங்கே வரும் பொழுது ரணில் வெளிநாடு போய்விட்டார். உங்களை சந்திப்பது பற்றி அவருக்கு நான் அறிவிக்கவும் இல்லை. இன்னும் சில தினங்களில் கொழும்பு திரும்பி விடுவார். வந்தவுடன் கட்டாயமாக நீங்கள் சொன்னதை அவரிடம் சொல்கிறேன்.” என்று நான் பிரபாகரனிடம் கூறினேன்.

இன்னும் கொஞ்சம் நேரம் பேசிக்கொண்டு இருந்தோம். கொழும்பு அரசியலை பற்றி மேலோட்டமாக பேசினோம். அவர் எந்த இடத்திலும் “இலங்கை அரசாங்கம்” என்ற வார்த்தைகளை பயன்படுத்த வில்லை. “சிங்கள அரசாங்கம்” என்றே திரும்ப, திரும்ப கூறினார்.

மலையக தமிழர் பற்றி, தமிழர் ஐக்கியம் பற்றி, சாதாரண சிங்கள மக்கள் பற்றிய தனது நல்லெண்ணத்தை பற்றியும் பேசினார்.

அத்துடன் இச்சந்திப்பு முடிந்தது.

அதுதான் அவருடனான கடைசி சந்திப்பு என நான் அப்போது நினைத்திருக்கவில்லை. ஒரு சமாதான அரசியல் தீர்வு வந்து விடும். அதன் பின் இலங்கை அரசியல் பரப்பில் அவர் ஒரு தீர்மானக்கரமான அரசியல் பாத்திரம் வகிக்க போகின்றார் என நான் அப்போது எண்ணினேன்.

இதன் பிறகு நான் ஒருநாளும் தமிழீழ விடுதலை புலிகள் தலைவர் வேலுபிள்ளை பிரபாகரனை சந்திக்கவே இல்லை.

ஆனால், அந்நேரம் போர் நிறுத்த உடன்பாட்டின் காரணமாக, புலிகளின் மீது எந்த தடையும் இல்லாத காலகட்டத்தில், புலிகளின் தலைவரை சென்று நான் சந்தித்து, நாட்டின் ஜனாதிபதி கேட்டுக்கொண்டதால், அவரின் செய்தியை கொண்டு சென்று பேசியதை வைத்துக்கொண்டு, அடுத்து வரும் பத்தாண்டுகள், (இன்றும் கூட...) என்னை தென்னிலங்கை இனவாதிகள் திட்டி திரிந்தார்கள்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# ஜனாதிபதி பதவியின் மூலம் கிட்டும் அதிகார பலத்தை தொடர்ந்து அனுபவிக்கத் துடிக்கும் ரணில்

இலங்கை என்னும் மாங்கனித் தீவை 'பிச்சை' எடுக்கும் நிலைக்கு கொண்டு வந்தவர்களில் தற்போதைய 'தற்காலிக' ஜனாதிபதி ரணிலுக்கும் பங்குண்டு என்பதை இலங்கையின் ஆட்சி பீடங்களை அலங்கரித்தவர்களின் கடந்த கால அத்தியாயங்களைப் படிப்பவர்களுக்கு நன்கு புரியும்.
இலங்கையின் பிரதமராக முன்னர் பதவி வகித்தபோதும் பின்னர் மகிந்தாவின் ஆட்சிக் காலத்தில் அவர்களோடு கொண்டிருந்த 'வர்க்க உடன்பாடு' காரணமாகவும் இலங்கையின் பொருளாதாரத்தை அடிமட்டத்திற்கு கொண்டு வந்தவர்களில் ரணில் முக்கிய பங்காளி என்பது உறுதி.
இவ்வாறான தற்போது தான் வகிக்கும் ஜனாதிபதி பதவியின் மூலம் கிட்டும் அதிகார பலத்தையும் அனைத்து வசதிகளையும் தொடர்ந்து அனுபவிக்கத் துடிக்கும் ரணில் விக்கிரமசிங்க. தொடர்ந்தும் அதை அனுபவிக்கும் வகையில் அதற்கான திட்டங்களை தீட்டுகின்றார். இதற்காக அவர் நாளாந்தம் மக்களை ஏமாற்றும் வகையில் பொய்களைச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டியுள்ளது என்பதை கடந்த சில வாரங்களாக கொழும்பில் பரவலாக பரிமாறப்படும் கருத்தாகும்.

அவரது இந்த கபடத்தனத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவாக இருப்பது இலங்கைக்கு தேவையான நிதி உதவிகளே ஆகும். இதோ வருகுது! அதோ வருகுது! ஏன்று மக்களை ஏமாற்றும் வகையில் அறிவிப்புக்களை தொடர்ச்சியாக விடுத்து வருகின்றார் இந்த 'வித்தைக்காரர்' ரணில்.
சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஆகு) நிதி உதவி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் சில நாட்களுக்கு முன்னர் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கவலை வெளியிட்டுள்ளார் என்பதை செய்திகள் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிந்தது.

ஜனாதிபதி ரணில் கடந்த வெள்ளிக்கிழமை 17ம் திகதி ஒரு கூட்டத்தில் 2.9 பில்லியன் டொலர்களை சர்வதேச நாணய நிதியத்தினர் வழங்க இருப்பதாகவும் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் முதல் தவணையை மார்ச் மாதத்தில் எதிர்பார்க்கலாம் எனவும் தெரிவித்தார்.

ஆனால் தனது டுவிட்டர் பதிவில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கைக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தினரின் வசதி குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளதுடன், இது முக்கிய பங்குதாரர்களான சீன அரசாங்கம், மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடுகளுடன் முரண்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய-பசிபிக் பணிப்பாளர் கிருஸ்ணஸ்ரீனிவாசன், சீனாவின் உத்தரவாதமின்றி இலங்கையின் வெளிநாட்டு நிதி வசதியை சர்வதேச நாணய நிதியம் அங்கீகரிக்காது என முன்னர் தெரிவித்திருந்ததையும் மனோ கணேசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.
இந்த சூழ்நிலையில், ஜனாதிபதி ரணில் சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தவணை மார்ச் மாதத்தில் வரும் என நம்பிக்கையூட்டும் செய்திகளை நாட்டுக்கு தெரிவிக்கின்றார்.

"உண்மையும் நேரும் பேசுவது யார்? இன்று இலங்கையர்களின் தலையில் தொங்கிக்கொண்டிருக்கும் 2.9 பில்லியன் டொலர் கேள்வி இதுவாகும்." ஜனாதிபதியின் கூற்றின் துல்லியம் குறித்தும் மனோ கணேசன் அவர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்பியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
இவ்வாறான நிலையில் இலங்கையின் 'தற்காலிக' ஜனாதிபதியாக நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் ரணிலுக்கு தமிழர் தரப்பில் ஒரே ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் 'தமிழரசுக் கட்சியினர்' எப்போது மௌனமாக இருக்கையில் இவ்வாறு மனோ கணேசன் அவர்கள் ரணிலைக் கூட துணிச்சலாக விமர்சனம் செய்வது பாராட்டுரியதாகும்.

## RE/MAX ACE Brokerage Inc வீடு விற்பனை முகவர் நிறுவனத்தில் விற்பனைப் பிரதிநிதியாக இணைந்துள்ள"..

(முன்பக்கத் தொடர்ச்சி)
திருவாளர்கள் செல்வன் காசிப்பிள்ளை. வாகீசன் ஜெயவீரசிங்கம் மற்றும் விஜேய் செல்வநாயகம் ஆகிய மூன்று வீடு விற்பனைத்துறை முகவர்களுமே, புதிய விற்பனைப் பிரதிநிதியாக இணைந்துள்ள ரஜீவ் செபராசா அவர்களை வரவேற்று தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.
கனடாவில் இல்லங்களுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு கெமராக்களை இணைக்கும் நிறுவனமான **CAMSONICS SECURITY SYSTEMS INC** அதிபர் ரஜீவ் செபராசா அந்தத் துறையில் வெற்றிகரமான ஒரு வர்த்தகப் பிரமுகராக விளங்கிவருகின்றார்.
தாயகத்தில் புகழ்பெற்ற ஒரு விஞ்ஞான ஆசிரியராக விளங்கிய அவர் இலங்கையின் தமிழர் பகுதியெங்கும் சூறாவளிப் பயணம் செய்து விஞ்ஞான மாணவர்களுக்கு இரசாயனவியல் போன்ற பாடங்களை போதித்தும். பரீட்சைகளுக்காக சிறப்பு வகுப்புக்களை நடத்தியும் மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் ஏனைய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் மதிப்பிற்குரியவராக விளங்கியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
அவரை வாழ்த்த விரும்புவோர் 647 302 5748 என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## யாழ்-பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசிய முன்னெடுப்புகளுக்கு அரணாக நின்றவர் பேராசிரியர் ரட்ணம் விக்னேஸ்வரன்'...

(பின்பக்கத் தொடர்ச்சி)
யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் கணிதத்துறை பேராசிரியருமான ரட்ணம் விக்னேஸ்வரன் அவர்கள் கடந்த 17.02.2023 அன்று காலமானார். அவரது பதவிக்காலத்தில் தமிழ்த் தேசிய செயற்பாடுகளுக்கு துணை நின்ற காரணத்தினால் அவரது துணைவேந்தர் பதவி இடைநடுவில் பறிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்துக்குள் இராணுவ தலையீடுகள் காரணமாக பதவியிழக்க வைக்கப்பட்டமை அவருக்கு இழைக்கப்பட்ட அநீதி எனவும், வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக சமூகம் பேராசிரியரை முன்னிறுத்தி போராடி நீதியை பெறுவதே விக்னேஸ்வரன் அவர்களுக்கு செலுத்தும் மெய்யான அஞ்சலி எனவும் தெரிவித்தார் பத்தி எழுத்தாளரும், அரசறிவியல் துறை மாணவனுமான ஐ.வி மகாசேனன்.

மறைந்த முன்னாள் துணைவேந்தர் இரட்ணம் விக்னேஸ்வரன் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் பாராளுமன்றப் பதிவேடுகள் பிரிவு மொழி பெயர்பாளராக இருந்த கால்ஞ் சென்ற செல்லப்பா நடராசா அவர்களின் அன்பு மருமகனும் தற்போது மொன்றியால் மாநகரில் வாழ்ந்து வரும் சமூக மற்றும் சமய சேவகர் நடராசா வாகீசன் அவர்களது மைத்துனரும் ஆவார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க்து

## அவதூறுகள் பரப்பியதாக முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர் அஜித் சபாரத்தினம் தொடுத்த வழக்கில் எதிராளி முக தமிழ் – கணபதிப்பிள்ளை யோகநாதன் என்பவர்...

(பின்பக்கத் தொடர்ச்சி)
மேற்படி வழக்குகள் சார்பாக 2022 ஆகஸ்ட் 18ம் திகதி அன்றைய திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் பாதிக்கப்பட்ட அஜித் சபாரத்தினம் அவர்களுக்கு பொது நட்ட ஈடாக $75,000 மற்றும் தண்டனையாகவும், அதேபோன்று ஒரு படிப்பினையாக மற்றவர்கள் இவ்வாறான செயல்களைச் செய்வதனைத் தடுக்கும் முகமாகவும் விதிக்கப்பட்ட தண்டப்பணம் $25,000 உட்பட மேலும் 2022 நவம்பர் 22ம் திகதியன்று வழங்கப்பெற்ற தீர்ப்பின்பிரகாரம் பாதிக்கப்பட்ட பிரதிவாதியான அஜித் சபாரத்தினம் அவர்களுக்கு முக தமிழ்- கணபதிப்பிள்ளை யோகநாதன் **(MK Tamil, 2137534 Ontario Corp, PARAII Media Group , PARAII.Com)** தொடர்ச்சியான நட்ட ஈடாக $23,000 வழங்க வேண்டும் என உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இவை யாவும் 30 நாடகளுக்குள் கொடுக்கப்படவேண்டும் என்றும் உயர் நீதி மன்ற நீதிபதியினால் உத்தரவிடப்பட்டுள்ளது.
இந்த வழக்கு தொடர்பான மேலதிக நிபந்தனைகளையும் உத்தரவுகளையும் பார்க்க கீழே தரப்பட்டுள்ள நீதிமன்றக் கோவை இலக்கத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.
இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்டதை கேள்வியுற்ற சில அன்பர்கள் இவ்வாறாக தொடர்ச்சியாக அவதூறுச் செய்திகளை பரப்பும் மற்றவர்களுக்கு இந்த தீர்ப்பானது ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்றும் இவ்வாறான அவதூறு வழக்குகள் வேறு சில அன்பர்களால் நீதி மன்றங்களில்கனடாவில் சமூக ஊடகங்களை நடத்தும் வேறு சிலருக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றின் தீர்ப்புக்கள் விசாரணைகளுக்குப் பின்னர் வெளிவரும் என்றும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர்.

**Citation :Sabaratnam V Mooka ,2022 ONSC 4779**
**Court File No :CV -19-00633610-0000 Date: 2022 August 18**
**Citation :Sabaratnam V Mooka,2022 ONSC 6552**
**Court File No :CV -19-00633610-0000 Date: 2022 November 22**

**Sapphire Banquet & Catering**

**Specializing in Videography & Photography**

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers
- and more...

**SHIVA SUBRAMANIAM (647) 406-4868**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பழ நெடுமாறன் போன்றவர்களது கருத்தினால் இராணுவம் எமது மக்களை அடக்கி ஆள முயற்சிக்கின்றது

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திர சேகரன் ராஜன்

தேசிய தலைவர் வருவார் உயிருடன் இருக்கிறார் என்று கூறுவதானது இலங்கையில் வாழக்கின்ற தமிழர்களை அடக்கி ஆழ்கின்ற நிலையினை உருவாக்கும் என கல்முனை மாநகர சபை உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான சந்திரசேகரன் ராஜன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் வெள்ளிக்கிழமை (17) விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், பழ நெடுமாறன் ஐயா போன்றவர்களது கருத்தினால் இராணுவம் எமது மக்களை அடக்கி ஆள முயற்சிக்கின்றது. தேசிய தலைவர் உயிருடன் இருக்கின்றார். அவர் வெளிப்படுவார் என தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. எமது மக்களுக்கான பணியினை தேசிய தலைவர் முன்னெடுக்க வேண்டும். அவர் உரிய நேரத்தில் வருவார். என்று நம்புகின்றோம். அவருடன் இணைந்து எமது மக்களுக்காக வாழ தயாராக இருக்கின்றோம். எமது தலைவரை அன்பாக நேசித்தவர்கள் நாங்கள். இன்று சிலர் தலைவரை வைத்து அரசியல் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதனை அவர்கள் நிறுத்த வேண்டும் என தெரிவிக்க விரும்புகின்றேன். என்றார்.



# மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த விசேட கலந்துரையாடல்



மன்னார் மாவட்டத்திற்கான விஜயத்தினை வெள்ளிக்கிழமை காலை (17) மேற்கொண்டுள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்டத்தினை சேர்ந்த கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழில் சார் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், கடற்றொழில் மற்றும் நீர் வேளாண்மை செயற்பாடுகளில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.



குறிப்பாக, இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறலினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக சுட்டிக்காட்டிய கடற்றொழிலாளர்கள், குறித்த அத்துமீறலை கட்டுப்படுத்துவதற்கு போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டினர்.

கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளின் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சட்டவிரோத தொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவுபடுத்தியதுடன், முழுமையாக சட்டவிரோத தொழில் முறைகளை கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழிலாளர்களின் பங்களிப்பின் அவசியத்தையும் வலியுறுத்தினார். இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் கே. திலீபனும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் — 5 மீனவர்கள் படு காயம்



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி மீனவர்கள் மீது நடுக்கடலில் இலங்கை கடற்படை தாக்குதலில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்த ஐந்து மீனவர்கள் பொறையார் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி யை சேர்ந்த வேல்முருகன் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் கடந்த 21ம் தேதி இரவு அதே பகுதியை சேர்ந்த பாலமுருகன், அருண் குமார், மாதவன், கார்த்தி, முருகன் மற்றும் படகின் உரிமையாளர் உள்ளிட்டோர் கடலுக்கு மீன் பிடிக்க சென்று உள்ளனர்.

வியாழக்கிழமை (23) அதிகாலை காரைக்கால் தென் கிழக்கு 44 நாட்டிகல் மைல் தொலைவில் கோடியக்கரைக்கு தென்கிழக்கு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களின் வலையை பறித்துக் கொண்டது டன் இரும்பு பைப்பால் கொடூரமாக தாக்கியுள்ளனர்.

இதில் ஐந்து மீனவர்கள் பலத்த காயமடைந்தனர். தொடர்ந்து உடலில் ரத்த கட்டுக்கள் ஏற்பட்டதுடன் ஒரு மீனவருக்கு லேசான எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

வியாழக்கிழமை (23) கரை திரும்பிய மீனவர்கள் தரங்கம்பாடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி சிகிச்சை மேற்கொண்ட பின் மேல் சிகிச்சைக்காக பொறையாறு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இலங்கை கடற்படையினர் படகில் இருந்த இன்ஜினை பறித்துக் கொண்டு தங்களை கொடூரமாக தாக்கியதாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

படுகாயம் அடைந்த ஐந்து மீனவர்களுக்கு பொறையார் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



இது தொடர்பாக மீன்வளத் துறையினர் மற்றும் கடலோர காவல் குழும போலீசாரிடம் மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

நடுக்கடலில் மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்ட சம்பவம் மயிலாடுதுறை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**- மன்னார் நிருபர்**



உலக செய்திகள்
World News

# இரண்டே வாரத்தில் 6 ஆயிரத்திற்கும் அதிக நிலநடுக்கங்கள் துருக்கியை நிலைகுலைய வைத்த பேரிடரில் இதுவரை 46 ஆயிரம் பேர் பலி

துருக்கியில் பிப்ரவரி 6 ஆம் தேதி ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து, கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் சுமார் 6 ஆயிரத்திற்கும் அதிகமுறை நில அதிர்வுகள் ஏற்பட்டதாக துருக்கி பேரிடர் மற்றும் அவசரநிலை மேலாண்மை ஆணையம் தெரிவித்து இருக்கிறது.

"இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கங்களை தொடர்ந்து துருக்கியில் 6 ஆயிரத்து 040 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் 1628 நிலஅதிர்வுகள் ரிக்டர் அளவு கோலில் 3 முதல் 4 ஆகவும், 436 முறை 4 முதல் 5 ஆகவும் பதிவாகி உள்ளது. 40 முறை ரிக்டர் அளவில் 5 முதல் 6 ஆக பதிவாகி இருக்கிறது. இதுதவிர 6.6 அளவிலும் நிலஅதிர்வுகள் உணரப்பட்டு இருக்கின்றன" என நிலநடுக்கம் மற்றும் ஆபத்து குறைக்கும் திட்ட இயக்குநர் ஆர்ஹன் டட்டார் தெரிவித்தார்.

நிலநடுக்கங்களை தொடர்ந்து இது போன்ற நிலஅதிர்வுகள் நீண்ட காலத்திற்கு தொடரும். இவற்றில் பெரும்பாலானவை ரிக்டரில் 5 மற்றும் அதற்கும் அதிகமாகவே இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.



தொடர் நிலநடுக்கங்களை அடுத்து டெக்டானிக் தட்டு பகுதிகளில் அமைந்து இருக்கும் துருக்கி நாடு 5 முதல் 6 மீட்டர் வரை நகர்ந்து இருக்கிறது. இந்த நிலநடுக்கங்களின் தாக்கம் சுமார் 1 லட்சத்து 10 ஆயிரம் சதுர கிலோமீட்டர்கள் தூரத்திற்கு உணரப்பட்டு இருக்கிறது. துருக்கி நிலநடுக்கங்களில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை சுமார் 46 ஆயிரத்தை கடந்துள்ளது.

# இந்தியா எங்கள் நண்பன். எங்கள் நண்பன் எங்களோடு மேலும் நெருங்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் - இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நோர் கிலோன்



**(இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நோர் கிலோன் என்பவரின் இந்த கூற்றை படித்த இந்திய பொருளாதார மற்றும் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இஸ்ரேல் உடனான இறுக்கமான தொடர்பு மற்றும் ஊழல் மிகுந்த இந்திய முதலாளிகளை இஸ்ரேல் அரசுடன் இணைப்பது போன்ற விடயங்கள் இந்தியாவின் எதிர்காலத்தை பாதாளத்திற்கு கொண்டு செல்லும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். அத்தடன் இந்தியாவின் மோடி அரசு மதச்சார்பான அரவை நிறுவுவதற்கும் இஸ்ரேல் மறைமுகமான ஆதரவை எப்போதும் வழங்கத் தயாராக உள்ளது. ஏனெனில் இதன் உள் ரகசியம் இஸ்ரேல் மற்றும் மோடி அரசின் மதங்கள் தொடர்பான அணுகுமுறைகள் உலகத்தவர்கள் அனைவருக்கும் நன்கு புரிந்த விடயம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். - ஆசிரியர் குறிப்பு)**

இஸ்ரேல் துறைமுகத்தை சிறப்பாக நிர்வகிக்கும் ஆற்றல் அதானி குழுமத்துக்கு இருப்பதாக இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நோர் கிலோன் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "இஸ்ரேலின் ஹைபா துறைமுகம் தற்போது அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஹைபா துறைமுகம் எங்களின் வியூக முக்கியத்துவம் வாய்ந்த சொத்து. அதனை நாங்கள் அதானி குழுமத்துக்குக் கொடுத்திருப்பது மிக முக்கியமான நடவடிக்கை. ஹைபா துறைமுகத்தை சிறப்பாக நிர்வகிக்கும் ஆற்றல் அதானி குழுமத்துக்கு இருக்கிறது. பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் அதானி குழுமத்தின் மிக முக்கிய தொழிலாக துறைமுகங்கள் உள்ளன. அவர்களின் துறைமுகங்களைப் பார்த்தேன். அவை நன்றாக இயங்குகின்றன. ஹைபா துறைமுகத்தை அதானிக்கு கொடுத்திருப்பதன் மூலம் இந்தியா - இஸ்ரேல் இடையேயான வர்த்தகம் அதிகரிக்கும். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் ஓர் இந்திய நிறுவனத்துக்கு எங்கள் துறைமுகத்தைக் கொடுத்திருக்கிறோம். இந்தியா மீதான் இந்திய நிறுவனங்கள் மீதான எங்களின் ஆழமான நம்பிக்கையின் வெளிப்பாடு இது.

இஸ்ரேலில் மேலும் பல தொழில்களைத் தொடங்க அதானி குழுமம் ஆர்வம் காட்டி இருக்கிறது. அதில் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்று நம்புகிறேன். டாடா, கல்யாணி, பெல் உள்பட 80 இந்திய நிறுவனங்களுடன் இணைந்து நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இந்தியா - இஸ்ரேல் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இரு நாடுகளுமே ஆர்வமாக உள்ளன. இதற்கான ஒப்பந்தம் இறுதியானதும், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் மேலும் பெருகும்.

இந்தியா எங்கள் நண்பன். எங்கள் நண்பன் எங்களோடு மேலும் நெருங்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இந்தியாவோடு எங்கள் உறவு மிகவும் சவுகரியமாக இருக்கிறது. பிராந்திய சூப்பர் பவர் என்பதில் இருந்து சர்வதேச சூப்பர் பவராக இந்தியா வளர்கிறது" என்று அவர் தெரிவித்தார். இஸ்ரேலின் ஹைபா துறைமுகத்தின் பொறுப்பை சமீபத்தில் அதானி குழுமம் ஏற்றது. இதற்காக அதானி குழுமம் 1.2 பில்லியன் டாலர் தொகையை அதில் முதலீடு செய்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# "சட்டவிரோத குடியேற்றங்களை தவிர்க்க" ஐ ஓ எம் – யாழ் மாவட்ட அதிபரிடம் பேச்சு

- நடராசா லோகதயாளன்



இலங்கையிலிருந்து கனடா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகளிற்கு தமிழர்கள் சட்டவிரோதமாக குடியேறுவதை தடுக்க குடியேறிகளிற்கான சர்வதேச அமைப்பு ஐ ஓ எம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ.ஓ.எம் தூதுக்குழுவினர் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாதசுந்தரனைச் சந்தித்து யாழ். மாவட்டத்திலிருந்து சட்டவிரோத புலம்பெயர் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடினர்.

ஐ.ஓ.எம் இன் இலங்கைக்கான உதவி வதிவிடப் பிரதிநிதி தலைமையிலான குழுவினரில் கனடா மற்றும் கானா நாட்டவர்கள் அடங்கிய குழுவினரே யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரனை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இச்சந்திப்பின்போது சட்டவிரோதமாக புலம்பெயர் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களை தடுப்பது தொடர்பிலும், யாழ்.மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு, தொழில் வழிகாட்டல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இன்றைய சூழலில் யாழ் குடாநாட்டில் இருந்து இளைஞர்கள் எதற்காக புலம்பெயர்ந்து செல்கின்றார்கள்? அதிலும் குறிப்பாக சட்டவிரோதமாக ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு - இருக்கும் பணத்தையும் இழந்து முகாம்களில் வாடி இருந்த பணத்தையும் இழந்து தாயகம் திரும்பும் சூழல் ஏற்படுவதாக ஐ ஓ எம் குழுவினர் குறிப்பிட்டனர்.

இவற்றிற்கு பதிலளித்த மாவட்ட அரச அதிபர் "இன்று நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காகவும் வேலை வாய்ப்பின்மை காரணமாகவும் அதிக இளைஞர்கள் சட்டவிரோத பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்" என்று அவர்களிடம் தெரிவித்தார்.

இதனால் தமது மாவட்ட இளைஞர்கள் வருமானத்தை ஈட்டவும் சட்ட பூர்வமாக பயணிக்கும் வகையில் வெளிநாடுகளில் அதிகமாக என்ன வேலைவாய்ப்புக்கள் உள்ளனவோ அதற்கான பயிற்சிகளை ஐ.ஓ.எம் வழங்கி சான்றிதழுடன் தொழிலிற்காக சட்டபூர்வமாக பயணிக்கும் ஏற்பாடுகளை ஐ.ஓ.எம் மேற்கொள்ள முன் வரவேண்டும் எனவும் மாவட்ட அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த ஐ.ஓ.எம் பிரதிநிதிகள் ஹோட்டல் பணி, தாதியர்கள் போன்ற பணிகளிற்கு உரிய பயிற்சினையும் ஆங்கில மொழிப் பயிற்சிகளையும் வழங்க முடியுமா என முயற்சிப்பதாக பதிலளித்துள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக பல நாடுகளிற்கு படகுகள் மூலம் சட்டவிரோதமாக பயணிக்க முயன்ற ஏராளமானோர், நடுகடலில் படகுகளில் ஏற்பட்ட பழுதுகள், அல்லது பன்னாட்டு கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு அருகிலுள்ள நாடுகளிற்கு அனுப்பப்பட்டனர்.

அவ்வகையில் கடனா செல்லும் நோக்கத்தில் புறப்பட்டு நடுகடலில் சிக்கித்தவித்த 300க்கும் அதிகமானோர் தற்போது வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஐ ஓ எம் அமைப்பு தம்மைப் பொறுப்பேற்று ஐ நாவின் அகதிகளிற்கான அமைப்பிடம் கையளிக்க வேண்டுமென்று கோரியுள்ளனர். எனினும் அது சாத்தியமில்லை என்று ஐ ஓ எம் கைவிரித்துவிட்டது.

அதேபோன்று டிகோகார்சியா, ரியூனியன் தீவுகள் ஆகிய இடங்களிலும் புலம் பெயரும் நோக்கத்துடன் வெளியேறிய தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய பின்புலத்தில் ஐ ஓ எம் மற்றும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோடையே நடைபெற்ற சந்திப்பு மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட கைதிகளில் ஒருவர் கை விலங்குடன் தப்பிச் சென்று மண்டபம் அகதி முகாமில் தஞ்சம்



மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்காக வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு,மன்னார் நீதி மன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு,மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் தப்பிய இரண்டு கைதிகளில் ஒருவர் செவ்வாய்க்கிழமை (21) காலை மண்டபம் அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ள தாக தெரிய வருகிறது.

குற்றம் ஒன்றின் காரணமாக மன்னார் போலீசாரால் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் தப்பிய மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் பகுதியை சேர்ந்த இளம் குடும்பஸ்தரான செல்வராஜ் சிந்துஜன் கடல் மார்க்கமாக மண்டபம் அகதி முகாமில் செவ்வாய்க்கிழமை (21) அதிகாலை தஞ்சமடைந் துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சிந்துஜன் தந்தை செல்வராஜ் கடந்த ஞாயிற்றுக்கிழமை ராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் தஞ்சம் அடைந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (21) காலை சிந்துஜன் மண்டபம் அகதி முகாமில் தஞ்சம் அடைந்துள்ளதால் உளவுத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் குறித்த நபர் மண்டபம் அகதி முகாமில் உள்ளமை தெரிய வருகிறது.

குறித்த நபர் வவுனியா சிறைச்சாலையில் குற்றம் ஒன்றிற்றாக தடுத்து வைக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது மன்னாரை சேர்ந்த இருவர் கை விலங்குடன் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த நபர் தலைமன்னாரில் இருந்து படகு மூலம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தெரிய வருகிறது.

தப்பிய மற்றைய கைதியை பொலிஸார் தேடி வருகின்றனர்.

**- மன்னார் நிருபர்**

# கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் முன்பள்ளிகளின் மாதாந்த முழுநிலா நாள் நிகழ்வு



அனைத்துலக மருத்துவநல அமைப்பு, மற்றும் றட்ணம் பவுண்டேசன் அனுசரணையில் கிளிநொச்சி வடக்கு கல்விவலயம், ஆரம்ப முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் "முழு நிலா நாள்" றங்கன் முன்பள்ளிக் கொத்தணியில் றங்கன் முன்பள்ளியின் முன்றலில் 08.02.2023 காலை 9.00 மணிக்கு நடைபெற்ற இரண்டாவது முழு நிலா நாள் விழா மிகவும் சிறப்புற நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் உள்ள விருந்தினர் கலந்து விழா பற்றியும் பெற்றோர் பெருந்திரளாக வருகை தந்திருந்தமை பற்றியும் அவர்களின் விழிப்புணர்வு பற்றியும் கருத்துரைக்கப்பட்டது.

இதற்காக IMHO, மற்றும் றட்ணம் பவுண்டேசன் நிறுவனங்களின் அற்பணிப்பான கொடை உதவி இப்பிரதேசத்தின் வரப்பிரசாதம், அவர்களுக்கு வாழ்த்துக்கள் கூறுவதாக விருந்தினர்கள் உரைத்தனர். இப்பகுதி மக்கள் வறுமையில் மிக நலிவடைந்தவர்கள். 300க்கு மேற்பட்டவர்கள் வருகை தந்திருந்தனர். அவர்கள் தம் நெருங்கிய உறவுகளின் திருமண வீட்டுக்கு வருவது போல வந்திருந்தனர். இம் மக்களின் பெரும் வரவேற்பை பெற்ற இவ் முழு நிலா நாள் நிகழ்வில் அரங்கநிகழ்வுகளாக குழந்தைகளின் கலைநிகழ்வுகள், ஆசிரியர்களின் கலைநிகழ்வுகள் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்டு அரங்கம் ஏறியன. இறுதியாக 12.30 மணிக்கு நன்றியுரையுடன் பெற்றோர்கள் ஆசிரியர்களின் முற்றத்து ஆடல் பாடலுடன் இனிதாக நிறைவேறியது.






THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

**உதயனின் பிரத்தியேகச் செய்தி**

# விநாயகர் விமர்சனம்

## உள்ளாடையும் போனால் இலங்கையின் நிலை என்னாகும்?

**(கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 5)**

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**



கனடாவாழ் உதயன் வாசகர்களே - நீங்கள் மிகுந்த விலை கொடுத்து வாங்கி அணியும் பிராண்ட்டட் உள்ளாடைகள் எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது என்று எப்போதாவது அதைத் திருப்பிப் பார்த்ததுண்டா?

அவற்றுள் Made in Sri Lanka என்று இருக்கக் கூடும் அல்லது Made in Bangladesh என்று இருக்கக் கூடும். இலங்கையைச் சேர்ந்த கம்பனிகளே அவ்வகை ஆடைகளை அங்கும் உற்பத்தி செய்கின்றன.

இலங்கை எவ்வாறு இந்த உள்ளாடைத்துறையிலே சிறக்குமியல்பு பெற்றது?

மேற்குலக நாட்டுச் சந்தைகளில் விற்பதற்காக ஆடைகளை சலுகை வழங்கப்பட்ட நாடுகளில் உற்பத்தி செய்து தீர்வை விலக்களிப்புகளுடன் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஏற்றுமதி செய்யலாம் என்னும் சந்தைவாய்ப்பை வழங்கியமையினாலேயே இலங்கையில் ஆடைதயாரிப்புத் துறை வளர்ச்சி பெற்றதேயன்றி வரலாற்று ரீதியாக பெல்ஜியத்திற்கு கண்ணாடி போல சுவிட்சர்லாந்திற்கு கைக்கடிகாரங்கள் போல இலங்கை ஒரு தையற்கடையாக இருக்கவில்லை. இந்த கோட்டா முறைமையும் சலுகைகளும் உருமாறி இப்போது GSP (General System of Preference) - பொது முன்னுரிமைத் தெரிவு என அழைக்கப்படுகின்றது. இது போன்ற சலுகைகளை ஆடைதயாரிப்புக்கு மாத்திரமன்றி வேறுபல பொருள்களுக்கும் வழங்கப்படுகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் பின்தங்கிய வறிய நாடுகளின் பொருள்களுக்கு தமது சந்தையைத் திறந்துவிடும். இச்சலுகைகளை வழங்கியபோதிலும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் GSP+ என அழைக்கப்படும் சலுகைப்பொதியே இப்போது சமர்க்களத்திற்கு வந்திருக்கிறது.



இலங்கை இப்போது அனுபவித்துவரும் GSP+ சலுகைப்பொதியினை இழக்க நேரிடும் இடரபாயத்தில் உள்ளதென இலங்கையில் உள்ள ஜேர்மன் தூதுவர் எச்சரித்துள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிக்கொள்ள அல்லது மாற்றியமைக்க இலங்கை தொடர்ந்தும் தயக்கம் காட்டிக் காலதாமதம் செய்துவருவதே இதற்கான முதன்மைக்காரணம் எனக்கூறப்படுகிறது. கடந்த 2022 ஒக்டோபர் மாதத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் அர்சுலா வான் டையர் அம்மையார் 2023 ஆரம்பத்தில் இலங்கையின் அடைவுகள் தொடர்பான மீளாய்வு அறிக்கை வெளிவரும் எனக் குறிப்பிட்டிருந்தார். அந்த அறிக்கை வெயிளிடப்படத் தயாராகிவிட்டமை தெரிய ஆரம்பித்துள்ளது. இந்த செயன் முறை 20.06.2021 அன்று ஆரம்பித்தது. ஐரோப்பியப் பாராளுமன்றம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள GSP+ சலுகைகளை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியது.

பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்ற பின் ஐரோப்பியப் பாராளுமன்றத்திலுள்ள 683 பிரதிநிதிகளில் 628 பேர் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். 15 பேர் மாத்திரமே தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்திருந்தார்கள். இத்தீர்மானம் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டது. அந்த செயற்பாடு இறுதிக்கட்டத்தை அடைந்து இப்போது ஜேர்மன் தூதுவரின் வாய் மொழி மூலம் வெளிவந்திருக்கிறது. அன்று ஐரோப்பியப் பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து வியப்புக்கு இடமின்றி வழமைபோலவே இலங்கைத் தரப்பிலிருந்து அதற்கு எதிராக வீராவேசமான கருத்துக்கள். வெளிப்படுத்தப்பட்டன. அதெப்படிச் செய்யலாம். இலங்கை இறைமையுள்ள நாடு அதன்மீது மேற்குலகம் சதிசெய்து தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளப்பார்க்கின்றன என்று சாடினர். தொலைநோக்குப்பார்வை கொண்டதாக காட்டிக்கொண்ட இலங்காபிமானிகள் GSP+ போன்ற முன்னுரிமைச் சலுகைகளில் தங்கிருப்பதை விடுத்து போட்டித்தன்மைவாய்ந்த உலக சந்தையில் இலங்கை தனது பொருள்களையும் சேவைகளையும் மேம்படுத்துவதன் மூலம் மேற்குலக நாடுகளின் இது போன்ற நேர்மையற்ற அழுத்தங்களிலிருந்து விடுபடவேண்டும் என்று வீரவசனம் பேசினர்.

ஆனால் இது எதுவும் இலங்கைக்கு உடனடியாகவோ நீண்டகாலத்திலோ சாத்தியப்படப் போவதில்லை. இன்றுள்ள சூழ்நிலையில் இலங்கை அதுபற்றி கனவு கூடக்காண முடியாது.



ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தகத்தில் அதிகளவில் தங்கியுள்ள நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு ஐரோப்பிய சந்தையில் பிரவேசிப்பதற்கும் வழமையான இறக்குமதித் தீர்வைகளிலிருந்து விலக்குப் பெறவும் முன்னுரிமைச்சலுகை வழங்கும் ஒரு ஏற்பாடே இந்த GSP+ ஆகும். அது தெரிவு செய்யப்படும் நாடுகளுக்கே வழங்கப்பட்டு வருகிறது. இது போன்ற சலுகைகளை அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளும் வழங்குகின்றன.

இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தினதும் ஐக்கிய அமெரிக்காவினது GSP+ சலுகைகளால் பெரிதும் நன்மையடைந்து வருகிறது. இச்சலுகைகளைப்பெறும் தகுதியுள்ள பயனாளி நாடுகள் சில விடயங்களை சலுகை வழங்கும் நாடுகள் அறிவிக்கும். அவை பெரும்பாலும் மனித உரிமைகளின் மேம்பாடு, ஜனநாயக விழுமியங்களில் முன்னேற்றம் சட்டவாட்சி மற்றும் சர்வதேச தர நியமங்களையும் சட்டங்களையும் பின்பற்றல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும். இவை நாகரிக வளர்ச்சிகொண்ட எந்த ஒரு நாடும் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் மேம்பட்ட விடயங்களாகும். மாறாக GSP+ சலுகை வழங்கும் எந்த ஒரு நாடும் பயனாளி நாட்டின் சந்தையை தமக்கு சாதகமாக மாற்றவேண்டுமென்றோ அந்நாட்டின் சொத்துக்களைக் கையகப் படுத்த வேண்டுமென்றோ கருதவில்லை. பயனாளிநாடுகள் தீர்வையின்றி அல்லது குறைந்த தீர்வைகளுடன் முன்னுரிமை அடிப்படையில் இலகுவில் தமது பொருள்களுக்கான சந்தைகளை பெற்றுக்கொள்ள உதவும் ஒரு அமைப்பாகவே அது செயற்பட்டு வருகிறது. ஜனநாயக விழுமியங்களைப் பேணுவதிலும் மனித உரிமை விடயங்களிலும் மோசமான பதிவுகளைக் கொண்டுள்ள நாடுகள் சலுகைகளைப் பெறுவதற்காக முண்டியடிக்கும்.

அதேவேளை மனித உரிமைகள் பற்றியும் ஜனநாயகம் பற்றியும் வாய்கிழியப்பேசும் சலுகை வழங்கும் நாடுகள் தமது சொந்த நாட்டின் மனித உரிமைகள் ஜனநாயகம் பற்றி முதலில் கவனித்துவிட்டு மற்ற நாடுகளின் விவகாரங்கள் குறித்துப் பேசவேண்டும், இறைமைகொண்ட ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட வேறுநாடுகளுக்கு அருகதை இல்லை அதனால் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு தாம் அடிபணிய மாட்டோம் என்று சலுகை பெறும் நாடுகள் சவடால் விடும்.

இவை வெறும் விதண்டாவாதங்கள் என்பது குழந்தைக்கும் புரியும். ஏனெனில் சலுகை வழங்கும் எந்த ஒரு நாடும் பயனாளி நாட்டைக் கட்டாயப்படுத்த முடியாது. GSP+ சலுகை வேண்டாமென்றால் எந்த ஒரு பயனாளி நாடும் எவ்வித கட்டுப்பாடுகளுக்கும் உட்பட வேண்டியதில்லை. தமது இஷ்டப்படி எதனையும் செய்து கொள்ளலாம். மறுபுறம் GSP+ சலுகைகளைப் பெறுவதற்காக செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படும் விடயங்கள் ஒன்றும் தீண்டத்தகாத விடயங்களோ பொது மக்களுக்கு எதிரானவையோ அல்ல. மாறாக நாகரிக முதிர்ச்சி கொண்ட எந்த சமூகமும் சுயமாகவே எய்த வேண்டுமென எதிர்பார்க்கப்படும் உயரிய விழுமியங்களாகும்.

எனவே இத்தகைய நாடுகளில் வாழும் பிரஜைகளுக்கு இது பற்றிய புரிதல் இருப்பது அவசியமாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகள் இதனை தமது தாய் நாட்டுக்கு எதிரான சர்வதேச சதி என்று மக்களை பிழையாக வழிநடத்துகின்றனர். அதுபற்றி எதுவும் புரியாத மக்களும் பூம் பூம் மாடுகள் போல தலையாட்டி அவர்களுக்காக கடைக்குப் போகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற கோரயுத்தம் பல்லாயிரக்கணக்கானவர்களைப் பலிகொண்டும் அங்கவீனர்களாக்கியும் கோடிக்கணக்கான சொத்துகளை அழித்தும் 2009இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னரும் நாட்டில் ஜனநாயகமோ மனித உரிமைகளோ சொல்லிக்கொள்ளும் அளவிற்கு மேம்படவில்லை. முற்றாக தமிழ்மக்களுக்கு எதிராகப்பயன்படுத்தப்பட்ட அதே கொடுங்கோல் சட்டங்கள் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் எதிராகப் பரந்துபட்டளவில் முன்பை விடத் தீவிரமாகப்பயன்படுத்தப்பட்டும் வருகிறது. போரின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் ஜனநாயக விரோத செயற்பாடுகள் போன்றவற்றை முன்னிறுத்தி ஐரோப்பிய ஒன்றியம் 15.02.2010 அன்று இலங்கைக்கு வழங்கியிருந்த GSP+ சலுகைகளை தற்காலிகமாக இடைநிறுத்தியது. 9.6 சதவீத தீர்வைகளை செலுத்தியே இலங்கைப் பொருள்கள் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் பிரவேசிக்க நேர்ந்தது. இதன் காரணமாக இலங்கை மிக மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டது. பெரும் எண்ணிக்கையிலான சிறிய ஆடைதயாரிப்பு நிறுவனங்கள் மூடப்பட்டன. ஏராளமான தொழிலாளர்கள் வேலையிழந்தனர். பெரிய நிறுவனங்கள் தமது ஏற்றுமதிகளின் விலைகளைக் குறைப்பதன் மூலம் தீர்வைப்பாதிப்பைத் தாமே தாங்கிக் கொண்டு ஐரோப்பிய ஒன்றியச் சந்தைகளைத்தக்க வைக்க முயற்சித்தன. மறுபுறம் உயர்விலைகொண்ட ஆடைகளை தயாரிப்பதன் மூலம் சந்தையை பாதுகாக்க முனைந்தன.

கடலுணவு ஏற்றுமதிகள் மாலைதீவுகளின் போட்டியைச் சந்திக்க முடியாமல் சந்தைகளை இழந்தன. இந்நிலைமை தொடர்ந்த நிலையில் 2015இல் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை அடுத்து 9.05.2017 அன்று இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ முன்னுரிமைச் சலுகை மீண்டும் வழங்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் 500 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த GSP+ சலுகைகளை இடைநிறுத்தி வைத்திருந்த காலப்பகுதியிலும், அமெரிக்கா இலங்கைக்கு இச்சலுகைகளைத் தொடர்ச்சியாக வழங்கிவந்தது. எனவே மேற்குலக நாடுகள் இலங்கையுடன் தொடர்பிலிருப்பதை ஒரேயடியாக நிறுத்திவிடாது. ஆனாலும் அது மேற்குலக நாடுகளுக்கு இலங்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததென்று அர்த்தப்படாது. உண்மையில் இலங்கைக்கே மேற்குலக நாடுகளின் சந்தைகள் தேவைப்படுகின்றன. இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளி நாடு சீனா என்று கூறப்பட்டாலும் இலங்கையின் ஏற்றுமதிகளில் சீனாவுக்கான ஏற்றுமதிகள் மிக மிக அற்பமே.



(தொடர்ச்சி 12 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மேய்ச்சல் தரவையினை இன்றி அல்லல்படும் மாந்தை கிழக்கு கால்நடை வளர்ப்பாளர்கள்!



**- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு செலவபுரம் கிராமத்தில் மேய்ச்சல் தரவையினை உருவாக்கித் தருமாறு இக்கிராமத்தின் கால்நடை வளர்ப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச பாண்டியன்குளம், செல்வபுரம் ஆகிய கிராமங்களில் பன்னிரண்டு ஆயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ள போதிலும் இதற்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக காலபோகம், சிறுபோகம் என இரு போகங்களிலும் பயிர்ச் செய்கை நடைபெறுவதன் காரணமாக கால்நடைகளை நீண்ட தூரம் கொண்டு சென்றும் மற்றும் வீதியின் இருமருங்குகளிலும் மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டி உள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் கால் நடைகளை வீதிகளில் விட்டு மேய்ப்பதினால் வாகனங்களில் மோதுண்டு கால்நடைகள் உயிரிழப்பதாகவும் தெரிவிக்கும் இக்கிராம கால் நடை வளர்ப்பாளர்கள் தமக்கான மேய்ச்சல் தரவையினை உருவாக்கித் தருமாறு கோரியுள்ளனர்.

இது தொடர்பாக மேய்ச்சல் தரவைகளை அமைத்துத் தாருங்கள் என கோரிக்கை விடுத்து வந்தாகவும் இதுவரை அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்கிக்கொண்டிருக்கும் பிரதேச செயலகமும் கால்நடை வளர்ப்பாளர்கள் மீது கரிசனை கொள்வதில்லை என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேய்ச்சல் தரவையின்மையால் கால்நடைகள் பால் சுரக்கும் வீதம் குறைவடைகின்றது என்றும் தமது பொருளாதாரம் கால்நடைகளிலே தங்கியிருக்கின்றது எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.



விவசாயத்தினையும் கால்நடை வளர்ப்பையும் வாழ்வாதாரமாகக் கொண்ட இந்த கிராமத்தில் மேய்ச்சல் தரவை அமைக்கப்படுவது அவசியமாகும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மல்லாவி ஆதார வைத்திய சாலை தாதிய உத்தியோகத்தர்களும் பணிப்பகிஸ்கரிப்பில்!



முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி ஆதார வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்களும் இன்றைய தினம் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நியாயமற்ற உயர் வங்கி வட்டி வீதத்தை குறைத்தல்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் ருசான் பெல்லானாவை தேசிய விஹத்திய சாலையிலிருந்து விலக்குதல்.

அனைத்து ஊழியர்களுக்கும் பணவீக்கம் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகளை பெறுதல்.

அதிகரித்த மின்கட்டணத்தை குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் நாடளாவிய ரீதியில் இன்று இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



இதேவேளை மல்லாவி ஆதார் வைத்தியசாலையில் பண்டுவம் பெரும் நோக்கில் வருகை தந்த நோயாளிகள் பலர் திரும்பி செல்லும் நிலை காணப்பட்டது.

**- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

# மன்னாரில் இடம்பெற்ற விசேட தகவல் தொழில்நுட்ப கலந்துரையாடல்




மன்னார் மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் மத்தியில் தகவல் தொழில்நுட்ப ரீதியாக காணப்படும் புதிய அணுகுமுறைகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை தெளிவு படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் இலங்கை தகவல் தொழில்நுட்பத்துறை கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் வியாழக்கிழமை (23) காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு நவீன தொழில்நுட்ப அனுகுமுறைகள் தொடர்பாகவும் தொழில்நுட்ப ரீதியாக தேசிய அளவில் காணப்படும் தொழில் வாய்ப்புகள் மற்றும் உயர்கல்வி கற்கைக்கான வாய்ப்புகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் முகமாக குறித்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலுக்கு விரிவுரையாளர்களாக இலங்கை தகவல் தொழில்நுட்ப கூட்டமைப்பின் செயலாளர் கிறிஸ்டி சாமுவேல் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப துறை கூட்டமைப்பின் உறுப்பினர் முகமட் இர்ஷாட், மன்னார் உயர் தொழில்நுட்ப கல்லூரி விரிவுரையாளர் சுப்பிரமணியம் சிவபாலன் உட்பட குழுவினர் கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்கியிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட செயலக மனிதவள உத்தியோகத்தர்கள், தேசிய தொழிற்பயிற்சி பயிலுனர் அதிகார சபை ஊடாக கல்வி பயிலும் மாணவர்கள், தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் தொழில்நுட்ப கற்கைகள் பயிலும் மாணவர்கள் கணினி துறை சார்ந்து செயல்படும் நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



குறித்த தொழில் நுட்ப தெளிவுபடுத்தல் கலந்துரையாடல் மன்னார் மாவட்டத்தை தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் இலங்கை தகவல் தொழில்நுட்ப துறை கூட்டமைப்பினால் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மன்னார் பொது வைத்தியசாலை சுகாதார பணியாளர்கள் போராட்டம்



மன்னார் பொது வைத்தியசாலையில் பணிபுரியும் சுகாதார பணியாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து செவ்வாய்க்கிழமை (23) காலை 7.30 மதியம் 12 மணி வரை அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

அதிகரித்துள்ள மின் கட்டணத்திற்கு எதிராகவும், அரச வைத்தியசாலைகளில் காணப்படும் மருந்து தட்டுப்பாடுகளை உடனடியாக நீக்க கோரியும் சுகாதார பணியாளர்களுக்கான மேலதிக கொடுப்பனவில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்ய கோரியும், சுகாதார துறையினருக்கும் பொது மக்களுக்கும் ஏற்பட்டுள்ள வரிச்சுமையை குறைக்குமாறு வழியுருத்தி மன்னார் பொது வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதார பணியாளர்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலதிக நேர கொடுப்பனவை வரையறை இன்றி வழங்கு, அதிகரித்த மின் கட்டணத்தை நீக்கு, சிற்றூழியர்களை அடக்கி ஆழாதே, அரசே அரச வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாட்டை உடனடியாக நீக்கு, நியாயமற்ற வரிக்கொள்கையை நீக்கு போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறு சுகாதார ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அதே நேரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களின் நியாயமான கோரிக்கைகளை நிவர்த்தி செய்து தராது விட்டால் விரைவில் அனைத்து ஊழியர்களும் இணைந்து சுகயீன போராட்டம் ஒன்றை முன்னெடுக்க போவதாக எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படும்?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவுக்கு பின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை பெற்றிருக்கின்றார். அரசியல் அமைப்பின் 70 (1) அ உருப்புரையின்படி அவர் இனி நாடாளுமன்றத்தை எந்த வேளையும் கலைக்கலாம். அதாவது ராஜபக்சகளின் தாமரை மொட்டு கட்சியினர் பலமாக காணப்படும் நாடாளுமன்றத்தின் மீதான அவருடைய பிடி மேலும் பலமடையப் போகின்றது. அதுமட்டுமல்ல ஒரு தேர்தல் நடந்து அதில் தாமரை மொட்டு கட்சிக்கு முன்பு மக்கள் வழங்கிய மக்களானை காலாவதியாகிவிட்டது என்று தெரிய வந்தால், அப்பொழுதும் அக்கட்சியின் மீதான ரணில் விக்கிரமசிங்கவின் பிடி மேலும் பலமடையும்.

நாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு உண்டு.ஆனால் தேர்தல்களை நடத்துவதற்கு வேண்டிய நிதி இல்லை என்ற காரணத்தை முன்வைத்து தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படும் நிலைமைகளே அதிகம் உண்டு. அரசாங்கம் ஒரு தேர்தலை வைக்கத் தயங்குகிறது என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு. அதில் ஓரளவுக்கு உண்மையும் உண்டு. இப்போதிருக்கும் அரசாங்கம் ஒரு நூதனமான சேர்க்கை. ஒற்றை யானையாகிய ரணில் விக்கிரமசிங்க தாமரை மொட்டுக்கள் பலமாக இருக்கும் நாடாளுமன்றத்திற்கு தலைமை தாங்குகிறார். ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவர். தாமரை மொட்டுக்களின் தாய்க் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. இரண்டு கட்சிகளுமே தேர்தல் அரசியலில் பரம வைரிகள். ஆனால் சிங்கள மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் கொண்டு வந்த அச்சுறுத்தல் காரணமாக இரண்டு பாரம்பரிய எதிரிகளும் தங்களுக்கு இடையே சுதாகரித்துக் கொண்டு ஒரு நூதமான கூட்டுக்கு போனார்கள். அதுதான் இப்போதுள்ள அரசாங்கம். சிங்கள அரசியல்வாதிகள் ஒரு பொது எதிரிக்கு முன் எவ்வாறு தங்களை சுதாகரித்துக் கொள்வார்கள் என்பதற்கு இப்போதிருக்கும் அரசாங்கம் ஒரு மிகச் சிறந்த உதாரணம்.

தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின் இந்த அரசாங்கம் அதற்குரிய மக்களாணையை இழந்து விட்டது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. எனவே ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால் அதில் இந்த அரசாங்கத்திற்கு மக்களாணை இல்லை என்பது தெரியவரக்கூடும். அந்த அடிப்படையில் சிந்தித்தால், இந்த அரசாங்கத்தை பொறுத்தவரை தேர்தலை வைப்பது என்பது அமில பரிசோதனையை ஒத்தது. எனவே இந்த அரசாங்கம் தேர்தலை ஒத்திவைப்பதற்கான காரணங்களைத் தேடும் என்று பரவலாக எதிர்பார்ப்பு உண்டு.

ஆனால் இங்கே ஒரு நுட்பமான வேறுபாட்டை நாம் கவனிக்க வேண்டும். அது என்னவெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே மக்கள் ஆணையை இழந்தவர். ஆனால் தாமரை மொட்டு கட்சி கடைசியாக நடந்த தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று ஆட்சியை கைப்பற்றிய ஒரு கட்சி. தன்னெழுச்சி போராட்டங்களின் விளைவாக அது மக்களானையை இழந்து விட்டது என்று கருதப்பட்டாலும் இனி ஒரு தேர்தலில்தான் அதைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். எனவே ஒரு தேர்தலைக் குறித்து அதிகம் பயப்பட வேண்டியது தாமரை மொட்டுக் கட்சிதான்.

அதற்காக ரணில் பயப்படத் தேவை இல்லை என்பதல்ல. அவருக்கும் பயம் உண்டு. ஏனென்றால் அரசியல் ஸ்திரத்தன்மை உள்ளவரைதான் பொருளாதாரத்தை நிமிர்த்தலாம். அல்லது மறுவளமாகச் சொன்னால் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம். ஒரு தேர்தல் நடந்து, அரசாங்கத்துக்கு மக்களாணை இல்லை என்று தெரிய வந்தால், நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை பலவீனமடையும். அப்பொழுது உதவி வழங்கும் தரப்புக்கள் உதவுவதற்குத் தயங்கும். பன்னாட்டு நாணய நிதியம் தரக்கூடிய நிதி உதவி இதுவரை கிடைக்கவில்லை. பெரும்பாலும் மார்ச் மாதத்திற்கு பின் அது கிடைக்கலாம் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கிறார். அது மிகச் சிறிய உதவி. இலங்கையின் கடனை அடைப்பதற்கு போதாது. ஆனால் அந்த உதவியின் மூலம் வேறு தரப்புகளிடம் உதவி பெறுவதற்குரிய நம்பகத்தன்மையை அரசாங்கம் பெற்றுவிடும். அதாவது உதவி பெறுவதற்கான தகமை அதிகரிக்கும். அதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் பிச்சை எடுப்பதற்கான தகமை அதிகரிக்கும். இந்த அடிப்படையில் பிச்சை எடுப்பதற்கு நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை வேண்டும். ஒரு தேர்தலை வைத்து அதனால் நாடு குழம்புமாக இருந்தால், அதனால் ரணில் எதிர்பார்க்கும் விதத்தில், எதிர்பார்க்கும் வேகத்தில் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியாமல் போகலாம். பொருளாதாரத்தை வெற்றிகரமாக நிமிர்த்தினால் அடுத்த ஜனாதிபதியாக ரணில் தான் வருவார். நாட்டுக்கு வேறு தெரிவு குறைவு. எனவே ரணில் அதை நோக்கித்தான் உழைக்கிறார். அதற்கு அவருக்கு கால அவகாசம் வேண்டும். அதே சமயம் அரசியல் ஸ்திரத்தன்மையும் வேண்டும்.

ஒரு தேர்தலானது, அரசியல் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்தான். எனினும் அதனால் ரணிலுக்கு எதிர்பாராத தோல்வி என்று எதுவும் கிடைக்காது. ஏனெனில் அவர் ஏற்கனவே மக்களானையை இழந்து விட்டார். ஆனால் தாமரை மொட்டுக்கு தோல்வி துலக்கமாகத் தெரிய வரலாம். அதனால் தாமரை மொட்டுக் கட்சிதான் இந்த விடயத்தில் அதிகம் அச்சப்படும்.

மேலும் இதில் ரணிலுக்கு ஒரு அனுகூலமான அம்சமும் உண்டு. என்னவெனில், ஒரு தேர்தலில் தோற்றால் தாமரை மொட்டுக்கள் ரணிலுக்கு மேலும் கீழ்படிவாக மாறும். எனவே ஒரு தேர்தல் நடந்தாலும் அதில் ரணிலுக்கு ஒரு நன்மை உண்டு. தீமையும் உண்டு.

உள்ளூராட்சி சபை தேர்தல் எனப்படுவது உள்ளூர் நிலவரங்களைப் பிரதிபலிப்பது. எனவே அதை வைத்து தேசிய அளவிலான அரசியலைக் கணிக்க முடியாது என்று ஒரு விவாதம் வரும். அதில் ஓரளவுக்கு உண்மையும் உண்டு. உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை, உள்ளூர் செல்வாக்குகளே தீர்மானிக்கின்றன. உள்ளூரில் காணப்படும் சாதி சமயம் தனிப்பட்ட செல்வாக்கு போன்ற அனைத்து அம்சங்களும் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும். என்றாலும் தேர்தல் முடிவுகளை தேசிய அளவில் கணிக்கும் பொழுது அங்கே கட்சிகள் பெற்ற வெற்றியாகத்தான் அது பார்க்கப்படும். அப்படிப் பார்த்தால், தாமரை மொட்டு கட்சி அதன் செல்வாக்கை இழந்து விட்டதா இல்லையா என்பதனை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஏதோ ஒரு விதத்தில் வெளிப்படுத்தும். எனவே அதை தாமரை மொட்டுக்கள் விரும்பாது.

எனவே உள்ளூர் நிலவரங்களை அதிகம் பிரதிபலிக்கும் ஒரு தேர்தல் முடிவு என்றாலும் அது தேசிய அளவில் ஒரு கட்சியின் எழுச்சி வீழ்ச்சிகளை காட்டும் என்ற காரணத்தால், தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று தாமரை மொட்டு கட்சி விரும்பக் கூடும்.

ஏறக்குறைய அப்படியொரு நிலைமை தான் 2015 ஆம் ஆண்டுக்குப் பின் “நல்லாட்சி” காலகட்டத்திலும் ஏற்பட்டது. 2015ல் நடந்த தேர்தலில் ரணில் மைத்திரி கூட்டு வெற்றி பெற்றது. மஹிந்த அணி தற்காலிகமாக பின்னடைவைச் சந்தித்தது. ஆனாலும் அது ஒரு முழுத் தோல்வி அல்ல என்பதனை பின்வந்த கூட்டுறவு சபைகளுக்கான தேர்தல் நிரூபித்தது. தேர்தலில் ராஜபக்ச அணி வெற்றி பெற்றது. அந்த வெற்றி ஒரு உள்ளூர் தன்மை மிக்க வெற்றி. எனினும் அந்த வெற்றியைக் கண்டு ரணில் மைத்திரி அரசாங்கம் அஞ்சியது. அதன் விளைவாக அடுத்து நடத்த வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தலை 20 மாதங்களுக்கு ஒத்தி வைத்தது. விளைவாக 2018 இல் நடந்தபோது தேர்தல் முடிவுகள் ரணில் மைத்திரி கூட்டுக்கு எதிரானவைகளாக காணப்பட்டன. அதாவது நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட அந்த அரசாங்கம் மக்களாணையை இழந்து விட்டது என்பதனையும், ராஜபக்சக்கள் மீண்டும் பலமடைகிறார்கள் என்பதனையும் அது நிரூபித்தது. அதன் விளைவாகவே மைத்திரி அச்சமடைந்து தனது விசுவாசத்தை இடம்மாற்றிக் கொண்டார். நல்லாட்சி அரசாங்கத்தைக் காட்டிக் கொடுத்து யாப்புச்சதிப் புரட்சியில் ஈடுபட்டார்.

எனவே இப்பொழுதும் ஒரு தேர்தல் நடந்தால் தாமரை மொட்டுக்கள் மக்களானையை இழந்து விட்டனவா என்று தெரியவரும். சஜித் பிரேமதாசாவுக்கும் ஜேவிபிக்கும் எவ்வளவு பலம் அதிகரித்திருக்கிறது என்பதும் தெரியவரும். எனவே ஒரு தேர்தலை வைத்து தனக்கு மக்களாணை இருக்கா இல்லையா என்பதை பரிசோதிப்பதற்கு தாமரை மொட்டுக்கள் விரும்பவில்லை. எனவே உடனடிக்கு ஒரு தேர்தல் வைப்பதை ஒத்திவைக்க வேண்டும் என்ற அதிக விருப்பம் தாமரை மொட்டு கட்சியிடம்தான் உண்டு.

ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரை தேர்தல் நடந்தால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. தேர்தலை ஒத்திவைத்து அடுத்த ஆண்டளவில் நடத்தினால் அவர் இப்போது இருப்பதை விட பலமான நிலையில் இருப்பார். இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல, தாமரை மொட்டுக்கள் பலமாகக் காணப்படும் நாடாளுமன்றம் கடந்த திங்கட்கிழமையோடு அவருக்கு ஒப்பீட்டளவில் கீழ்ப்படிவுள்ளதாக மாறியிருக்கிறது. ஒரு தேர்தல் நடந்து அதில் தாமரை மொட்டுக்கள் தமது மக்கள் ஆணையை இழந்துவிட்டமை தெரியவந்தால், அப்பொழுதும் தாமரை மொட்டுக்கள் ரணிலுக்கு மேலும் கீழ்படிவாக மாறும்.

அதேசமயம் தேர்தலை அடுத்த ஆண்டுவரை ஒத்தி வைத்தால் அதிலும் அவருக்கு நன்மை உண்டு. கடந்த சனிக்கிழமை தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடந்த ஒரு நிகழ்வில் நிகழ்த்திய உரையில் அவர் அதைச் சூசகமாகத் தெரிவித்திருகின்றார். அடுத்த ஆண்டளவில்தான் ஒரு தேர்தலுக்கான வாய்ப்புகள் இருப்பதாக அவர் கூறவருகிறார். ஆனால் அடுத்த ஆண்டு ஒரு ஜனாதிபதி தேர்தலையும் அவர் நடத்த வேண்டும். அனேகமாக அது அவருடைய ஆயுளின் கடைசி ஓவராகவும் இருக்கலாம். அந்த ஓவரை வெற்றிகரமாக ஆடுவது என்றால் அவர் அதை இரண்டு தளங்களில் ஆட வேண்டும். ஒன்று தாமரை மொட்டுக்களின் மீதான தனது மேலாண்மையைப் பேண வேண்டும். இரண்டு பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டும். ஆனால் இலங்கையைப் போன்று பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்த கிரேக்கத்தில் ஐந்து ஆண்டுகளுக்குள் எழு தடவைகள் அரசாங்கம் மாறியது. அர்ஜென்டினாவில் ஐந்து தடவைகள் அரசாங்கம் மாறியது. ஐந்து தடவைகள் நிதியமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள். இலங்கையில்?

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 349
***** ***** ***** ***** **

கவிஞர் தியாரூ

தேங்காயாய் இருந்திடாதே;
தெருவினிலே சிதறடிப்பார்!
மாங்காயாய் இருந்திடாதே;
மறுகணமே உனைக்கடிப்பார்!
தூங்காத பெருநதியாய்
தடைகடந்து நடைபோடு;
தேங்காத வாழ்வினிலே
தோல்வியொன்று கிடையாது!

குறும்பாடாய் இருந்திடாதே;
கழுத்தினிலே கத்திவைப்பார்!
சிறுமுயலாய் இருந்திடாதே;
நாய்வாயில் சிக்கவைப்பார்!
உறுதிமிகு வைரமென
உன்மனதில் உரமேற்று;
இறுதிவரை வாழ்வுண்டு;
இன்பத்தின் கொடியேற்று!



# புலம் பெயர் தமிழர்களின் திரைப்படத் தயாரிப்பு முயற்சிகள் அவ்வப்போது விலகிச் சென்றாலும் ஓரளவிற்கு சரியான பாதையிலேயே செல்கிறன என்பதை மெய்ப்பித்த "பொய்மான்"




தமிழ்த் திரைப்படத்துறை என்றவுடன் எமக்கு உடன் ஞாபகத்திற்கு வருவது தென்னிந்திய திரைப்படங்களே! அனால் அதையும் தாண்டி ஈழத் திரைப்படத்தறை. புலம் பெயர் தமிழர்களின் திரைப்படத்துறை என்ற இரண்டு தளங்களிலிருந்தும் பல திரைப்படங்கள் தயாரிக்கப்பெற்று திரைகளுக்கு வந்த வண்ணமே உள்ளன.

இவ்வாறு திரைப்படங்களை தயாரிப்பதும் அவற்றை பல்வேறு நாடுகளிலம் திரையிடுவதும் தமிழர்களால் ஏற்பாடு செய்யப்படும் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்படுவதும் விருதுகளைத் தட்டிக் கொள்வதும் என் காதுகளுக்கும் கண்களுக்கும் அருகில் வந்து போகின்ற தகவல்களாக உள்ளன.

இவ்வாறான நிலையில் ஞாயிற்றுக்கிழமை (19) கனடாவின் ஸ்காபுறோ நகரில் திரையிடப்பெற்ற "பொய்மான்" என்னும் புலம் பெயர் தமிழர்களின் திரைப்படத்தை பார்த்து இரசித்த பின்னர், விமர்சனம் ஒன்றை எழுத வேண்டும் என்ற உற்சாகமான எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளது என்பதே இந்தப் பதிவிற்கான காரணமாகும்.

ஒரே வரியில் கூறுவதானால் "புலம் பெயர் தமிழர்களின் திரைப்படத் தயாரிப்பு முயற்சிகள் அவ்வப்போது சற்று விலகிச் சென்றாலும் அண்மைக் காலங்களில் சரியான பாதையிலேயே செல்கிறன என்பதை மெய்ப்பித்த திரைப்படமாக "பொய்மான்" திகழ்கின்றது.

கனடாவில் "பொய்மான்" ஐ நாம் பார்த்து ரசித்து பரவசத்துடன் படமாளிகையை விட்டு வெளியேவந்த போது ரசிகர் அனைவரும் ஒரே குரலில் "சபாஷ்" என்று பகிர்ந்து கொண்டமை அவர்கள் முகங்களில் காணப்பெற்ற "மலர்ச்சி" ஆகியவை அந்த திரைப்படத்திற்கு கனடாவில் மாபெரும் மகுடம் சூட்டப்பெற்றதற்கு ஒப்பானது என்றே பதிவு செய்கின்றோம்.


திரைப்படத்தின் கதையை முழுமையாகச் சொல்வஜது விட. படத் தயாரிப்பில் அடங்கியுள்ள உத்திகள். இயக்கம். நடிக நடிகைகளின் பாத்திரப் படைப்புக்கள் தொழில் நுட்பம், குறிப்பாக ஒளிப்பதிவு. இசை. பாடல்கள் நடிப்பு என இவை அனைத்திலும் காணப்பட்ட சிறப்புக்களை இந்தப் பதிவில் குறிப்பிடுவது தவிர்க்க முடியாதது என்பதே எமது கருத்தாகும்.









படமாளிகையை விட்டு வெளியேறிய போது. அவுஸ்த்திரேலியா வாழ் வைத்தியப் பெருந்தகை ஜெயமோகன் அவர்களால் தயாரிக்கப்பட்டது என்பதோடு அவரே கதாநாயகராக நடித்தும் உள்ளார் என்பதை அறிந்து கெண்ட போது. "பொய்மான்" திரைப்படத்திற்காக தன்னையும் தன் குடும்பத்தினரையும் எந்தளவிற்கு அர்ப்பணித்திருப்பார் என்பதை உணரக் கூடியதாக இருந்தது.

கனடாவிற்கு வெளியே தயாரிக்கப்பெற்ற நம்மவர்களின் திரைப்படங்களைப் பார்க்க எமக்கு முன்னர் சந்தர்ப்பங்கள் கிட்டியிருந்தன. அவற்றுள் சில இன்றும் எம் மனங்களில் நிலைத்து நிற்கின்றன. அதே போன்று அவுஸ்த்திரேலியாவில் தயாரிக்கப்பெற்ற திரைப்படமாக இருந்தாலும் எமது வடக்கு கிழக்கு தாய் மண்ணின் அழகையும் அதன் வளத்தையும் அதற்கு மேலாக எமது மக்கள் இராணுவ அடக்குமுறையின் கீழ் அனுபவித்த வலிகள் மற்றும் இழந்த உறவுகள் உடமைகள் பற்றிய காட்சிகளை சில நிமிட நேரத்திற்குள் திரைக்குள் கொண்டு வந்து காட்டி எம்மவர்களை கண்ணீர் சிந்தவைத்த தயாரிப்பாளர் மற்றும் இயக்குனர். ஒளிப்பதிவாளர் ஆகியோரை பாராட்டாமல் இருக்க முடியாது.

"பொய்மான்" திரைப்படத்தின் கதைக் கருவைப் பற்றி நினைக்கின்றபோது அது ஒரு சவால்கள் நிறைந்த ஒன்றாகவே நாம் பார்க்கின்றோம்.

ஞாபக மறதி (amnesia) நோயால் பாதிக்கப்பட்டவர் என்று பொய்யைச் சொல்லி அந்த நோயாளியாக நடித்து அதன் மூலமாக திரைக்கதையை நகர்த்தி அதற்குள் எமது தமிழர் சமூகத்திற்குள் புரையோடிப் போயுள்ள மனித நேயத்தையும் தியாகங்களையும் அதற்கு சமாந்தரமாக படிந்துள்ள பொருளாசை. ஏமாற்றுத்தனம் ஆகியவற்றை கதையின் மூலமும் வசனங்கள் மூலமும் எடுத்துச் சொல்லும் "பொய்மான்" திரைப்படத்தில் ஆரோக்கியமான நகைச்சுவைகளுக்கும் பஞ்சமில்லை என்றே துணிந்து பதிவு செய்கின்றோம்.




ஒரு வேண்டுகோள் இந்த திரைப்படத்தை கனடாவில் திரையிட ஏற்பாடுகள் செய்தவர்களுக்கு. தயவு செய்து இந்த "பொய்மான்" மீண்டும் எமது இரசிகர்களுக்கு காட்டப்பட வேண்டும். அதே நேரத்தில் கனடா வாழ் திரைப்பட ரசிகர்களுக்கான ஒரு வேண்டுகோள்: அற்புதமான கலைப்படைப்பான "பொய்மான்" மீண்டும் இங்கு திரையிடப்பெறுகின்ற போது. எவ்விதமான தயக்கமும் இன்றி அன்றே படமாளிகைகளுக்குச் சென்று அதைப் பார்த்து ரசித்து எம்மைப்போன்று பாராட்டுங்கள். இவ்வாறான எம்மவர் திரைப்படங்கள் தொடர்ந்த வெண் திரைகளில் தோன்றிட வழி செய்யுங்கள் என்பதை தயவுடன் பதிவு செய்கின்றோம்.

"பொய்மான்" திரைப்படத்தின் உருவாக்கத்தில் பின்னால் உள்ள விபரங்களையும் நாம் இங்கு பதிவு செய்கின்றோம்.

அவுஸ்திரேலிய மண்ணில் ஷோபனம் கிரியேஷன்ஸ் கலைஞர்களால் உருவாகியுள்ள "பொய்மான்" திரைப்படம், தமிழ்க் கலைஞர்களின் அரியதொரு படைப்பாக காணப்படுகிறது. கங்காரு தேச தமிழ் சினிமா படைப்பாற்றலில் இத்திரைப்படம் ஓர் மைல்கல்லாக தடம் பதிக்கும் என்றும் எதிர்வு கூறலாம்.

அவுஸ்திரேலிய மண்ணில் உருவாகிய "பொய்மான்" ஆஸ்திரேலிய திரையரங்குகளில் ஏற்கெனவே திரையிடப்பட்ட போது பாராட்டுக்களையும் வரவேற்பையும் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது. "பொய் மான்". இவ் முழுநீள திரைப்படத்தில் ஜனார்தன், கவிஜா, ஜெயமோகன், ஷர்மினி அகிய நடிக நடிகைகள் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர். ஷோபனம் கிரியேஷன்ஸ் தயாரிப்பில்புற்றுநோய் மருத்துவராகவும், மேடை நாடகம், குறும்பட இயக்குனாராகவும் அவுஸ்த்திரேலியாவில் நன்கு அறியப்படும் மருத்துவர் ஜெயமோகன் முழுநேர திரைப்பட இயக்குனாராக அறிமுகமாகியுள்ளார்.

இந்திய சினிமாக்களுக்கு ஒப்பாக போட்டி போடும் வகையில், புலம்பெயர் இளங் கலைஞர்களின் படைப்பாற்றலில் அவுஸ்திரேலியாவில் உருவாகிய "பொய்மான்" திரைப்படம் தமிழ் சினிமா உலகில் ஓர் வரலாற்றுச் சாதனை படைக்கும் என்றே எதிர் பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் தயாரிக்கப்பட்ட இந்த திரைப்படத்தை ஒரு கப்புசினோ காதல் மற்றும் பூமராங் போன்ற பாராட்டப்பட்ட குறும்படங்களையும் இயக்கிய டாக்டர் ஜே ஜெயமோகன் எழுதி இயக்கியுள்ளார். இயக்குனர் ஜெயமோகனின் இரண்டு குறும்படங்களும் உலகளவில் 50,000க்கும் அதிகமான பார்வைகளுடன் பலத்த பாராட்டுக்களையும் பெற்றுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

பொய் மான் திரைப்படத்தின் எடிட்டிங்கை செந்தில்குமார் ஆர் மற்றும் ஹரிஷ் செய்துள்ளனர். கலை இயக்கம் பணியை ஷாமினின் சி ஆற்றியுள்ளனர்.

இத்திரை, இசை பாடல்களின் வரிகளை பாரதியார், குவேந்திரன், ஜெயமோகன், ஆதி எழுதியுள்ளனர். பொய்மான் படத்தின் இசையை சாரு ராம், ஆதி, குரு பி ஆகியோர் மெருகூட்டியுள்ளனர்.

பலத்த எதிர் பார்ப்புகளுடன் வெளிவரும் பொய்மான் பாடல்களை கலைமாமணி பூஷணி கல்யாணராமன், கிரே, ஆர்.பி ஷ்ரவன் (சூப்பர் சிங்கர்), ஆதி ஆகிய பாடகர்கள் பாடியுள்ளனர்.

**- கனடாவிலிருந்து மலையன்பன்**

(8ம் பக்கத் தொடர்ச்சி)

# விநாயகர் விமர்சனம்

## உள்ளாடையும் போனானல் இலங்கையின் நிலை என்னாகும்?

ஆனால் இலங்கையின் இறக்குமதிகளில் 22.4 சதவீதம் சீனாவிலிருந்து வந்தது. இலங்கையின் ஏற்றுமதிகளில் 23 சதவீதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு செய்யப்பட்டது. 9 சதவீதம் மாத்திரமே ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெறப்பட்டது. 2020 இல் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிலிருந்து 2083 மில்லியன் யூரோ பெறுமதியான பொருள்களை இறக்குமதி செய்தது. ஆகவே ஏற்றுமதிகளுக்காக இலங்கைக்கு ஐரோப்பிய நாடுகளின் சந்தைகள் தேவைப்படுகிறது. அது மட்டுமன்றி இலங்கையின் முதன்மை ஏற்றுமதிச்சந்தை அமெரிக்காவாகும். இலங்கையின் 25 சதவீதமான ஏற்றுமதிகள் அமெரிக்காவுக்குச் செல்கின்றன. ஆகவே இலங்கையின் ஏற்றுமதிகளில் பெரும்பாலானவை மேற்குலக நாடுகளுக்கே செல்கின்றன. இதுபோன்றவொரு சந்தை வாய்ப்பை சீனாவால் வழங்கிவிட முடியாது.

அண்மையில் ஐரோப்பிய பாராளுமன்றத்தால் நிலைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இலங்கைக்கு விடுக்கப்பட்டுள்ள கடும் எச்சரிக்கையாகவே பார்க்கப்பட வேண்டும். அந்த அபாயச் சங்கு ஆட்சியாளர்களின் காதுகளில் கேட்கவே இல்லை. கெடுகுடி சொற்கேளாது என்பதற்கேற்ப மனித உரிமைச் சட்டங்களை தூக்கி வீசிவிட்டு பயங்கரவாத தடைச்சட்டததை மேலும் கூர் தீட்டிப்பயன்படுத்துவதையே சமீபத்தில் அதிகாரத்திற்கு வந்த ஆட்சியாளரின் நடவடிக்கைகள் காட்டுகின்றன. பொருளாதாரம் படுபாதாளத்தில் விழுந்து கிடக்கிறது. விலைவாசிகள், வரி, மின்கட்டணம், நீர்க்கட்டணம், எரிவாயுவிலை என அனைத்தும் ஏககாலத்தில் அதிகரித்து இடிமேல் இடியாக இறங்கி மக்களை வதைத்துவரும் நிலையில் "நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன் நாலாறு மாதமாய் குயவனை வேண்டி கொண்டுவந்தான் ஒரு தோண்டி, மெத்தக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி" என்று கையில் இருந்த 500 மில்லியன் டொலர் சலுகை வர்த்தகத்தையும் இழந்துவிடும் நிலையில் இலங்கை இருக்கிறது.

GSP+ இழக்கப்படுமாயின் அது பெரிய நெருக்கடியை உருவாக்கும். சுருக்கமாகச் சொன்னால் ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் சேர்ந்து இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு GSP+ சலுகையை நீக்கினாலோ அல்லது இலங்கையிலிருந்தான இறக்குமதிகளின் அளவை மட்டுப்படுத்தினாலோ இலங்கைப் பொருளாதாரம் எழவே முடியாதபடி சுருண்டு விழும். அதனை சீனாவால் காப்பாற்ற முடியாது.

இலங்கையால் தனது உள்ளாடையை (தொழிலை) காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை என்றால் ..........? பார்க்கவே கண்கூசும்........

# சிவராத்திரி
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

சிவனுக்கு உகந்த திருநாள் சிவராத்திரி
அவனன்றி எதுவுமே அசையா உலகிலே!
மாசி மாதம் சதுர்த்தசித் திதியில்
மாசின்றி மக்கள் மகிழ்வாய்க் கொண்டாடுவர்
பிரமாவும் விஷ்ணுவும் பெருமைப் பட்டகால்
பரமன் விஸ்வரூபப் படிமம் காட்டியநாள்
தேவர்கள் பாற்கடலைத் தயிராய்க் கடைந்தவேளை
தேவா அமிர்தத்திற் தோன்றிய நஞ்சை
பரமசிவன் பருகியதைப் பார்த்த போதுமே!
பராசக்தி பதைத்துப் பாதுகாத்த நாளாம்
சிவனடியார் சிவனைத் தொழுத காலையில்
சிவலிங்கம் காட்சி தந்ததும் இந்நாளாம்
காலையில் நீராடி கனிகள் பாலுடன்
மாலைவரை உணவை மருந்தாய் உண்பர்
இரவு முழுவதும் எம்பிரானை வேண்டியே!
விரதம் இருந்து மந்திரம் சொல்வர்
நான்கு சாமமும் நாயகன் திருவடியில்
மான்புடன் மலரொடு மனமுருகி வேண்டுவர்
அரிசி கோதுமை அறுகு வில்வத்தால்
அர்ச்சனை செய்து அமலனை வழிபடுவர்
மாங்கனி பலாக்கனி மாதுளை கொண்டு
பாங்காய்ப் பரம சிவனுக்குப் படைப்பர்
அடுத்தநாள் அடியார்க்கு அன்னதானம் வழங்கி
எடுத்த நோன்பை இனிதே முடிப்பர்
நாமும் நர்த்தனை இந்நாட் தொழுதே!
சேமம் பெற்றே சிறப்பாய் வாழ்வோமே!

ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453



# கல்லூரி வளாகத்திலேயே பெண் முதல்வரை பெட்ரோல் ஊற்றி எரித்த மாணவன்

இந்தியா செய்திகள் India News



மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரில் பி.எம். பார்மஸி கல்லூரி உள்ளது. இங்கு முதல்வராக இருப்பவர் விமுக்தா ஷர்மா (வயது 50). இவர், மாலையில் கல்லூரி பணி முடிந்து காரில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அவரை வழிமறித்த 24 வயது இளைஞர், முதல்வரிடம் வாக்குவாதம் செய்து, கையில் வந்திருந்த பெட்ரோலை, விமுக்தா ஷர்மா மீது ஊற்றி தீ வைத்து கொளுத்திவிட்டு தப்பியோடினார்.

அக்கம்பக்கத்தினர் கல்லூரி முதல்வரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். 90 சதவீத தீக்காயங்களுடன் அவர் உயிருக்கு போராடி வருகிறார். தீ வைத்து கொளுத்திய இளைஞனை போலீசார் கைது செய்து விசாரித்தனர்.

விசாரணையில் அவன் முன்னாள் மாணவன் என்பதும், தனது மதிப்பெண் சான்றிதழை வழங்கிட கோரி பல முறை முதல்வரை சந்தித்தும், தராமல் இழுத்தடிப்பு செய்ததால் ஆத்திரம் தாங்காமல் பெட்ரோல் ஊற்றி தீ வைத்து கொளுத்தியதும் தெரியவந்தது.

சினிமா

# நடிகை அனுஷ்காவுக்கு "சிரிப்பு நோய்" பாதிப்பு காரணம் என்ன? மருத்துவர் விளக்கம்



நடிகை அனுஷ்கா ஷெட்டி சமீபத்தில் அளித்த பேட்டியில் தனக்கு சிரிப்பு நோய் உள்ளதாக தெரிவித்து இருந்தார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், "எனக்கு சிரிப்பு நோய் உள்ளது. அதாவது, எப்போதும் சிரித்துக்கொண்டே இருப்பது. சிரிப்பதெல்லாம் ஒரு நோயா என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், உண்மையில் எனக்கு அந்த நோய் உள்ளது. ஒருமுறை நான் சிரிக்க ஆரம்பித்தால், குறைந்தது 20 நிமிடங்கள் வரை சிரித்துக் கொண்டே இருப்பேன். காமெடி காட்சிகளைப் பார்க்கும்போதும், அதை படமாக்கும்போதும் நான் தரையில் விழுந்து சிரித்துள்ளேன். இந்த நோயால் காமெடி காட்சிகளைப் படமாக்கும்போதும் எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். சிரிப்பை அடக்க முடியாமல் சில சமயங்களில், படப்பிடிப்புக்கு இடைவேளைவிட்டு போய்விடுவேன். சிரிப்பை அடக்கிய பிறகே மீண்டும் வந்து நடிப்பேன்" என்று தெரிவித்துள்ளார்.

ரசாயன மாற்றம்

இந்நிலையில், இந்த நோய் மூளையில் ஏற்படும் ரசாயன மாற்றத்தால் ஏற்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மருத்துவர்கள் கூறுகையில், "சூடோபுல்பார் என்ற பிரச்சினை மூளையின் முன் பகுதியில் ஏற்படும் ரசாயன மாற்றத்தால் ஏற்படுகிறது. மூளையில் செரோட்டோனின் என்ற ரசாயன அளவு குறைவதால் சில நேரங்களில் அழுவதும், சிரிப்பதும் நடைபெறும். மூளையில் எமோசனல் சுழற்சியில் மாற்றம், அலர்ஜி, வீக்கம் போன்ற பல காரணங்களால் வயது மூப்பு காலத்தில் இதுபோன்ற பாதிப்பு வருவது வழக்கம். அரிதாகவே இளம் வயதில் இந்த பாதிப்பு வருகிறது. இதனை சரிசெய்ய பல சிகிச்சைகள் உள்ளன. எஸ்எஸ்ஆர்ஐ என்ற மருந்தினை செலுத்தும்பொழுது இந்த உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியும்" என்று கூறினர்.

*"Once, while attempting to cross a street in Scarborough with my Grandmother, I experienced mental trauma. It made me to get into Municipal Politics." - Scarborough North City Councilor Myers Jamaal -*

# எனது பாட்டியோடு ஒரு தடவை ஸ்காபுறோ வீதி ஒன்றை நான் கடக்க முற்பட்ட போது ஏற்பட்ட மனப் பாதிப்பே என்னை மாநகராட்சி அரசியலுக்கு அழைத்துச் சென்றது


## கனடா உதயன் பிரதம ஆசிரியருக்கு வழங்கிய பேட்டியில் ஸ்காபுறோ வடக்கு நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

*"**சி**ல வருடங்களுக்கு முன்னர் எனது பாட்டியோடு ஒரு தடவை ஸ்காபுறோ வீதி ஒன்றை நான் கடக்க முற்பட்ட போது ஏற்பட்ட மனப் பாதிப்பே என்னை மாநகராட்சி அரசியலுக்கு அழைத்துச் சென்றது. அன்று நாம் இருவரும் வீதியைக் கடக்க முயன்றோம். நான் அழைத்தும் எனது பாட்டி வீதியைக் கடக்க விரும்பவில்லை. ஏன் என்று கேட்டேன். இங்கு பாதுகாப்பாக வீதியைக் கடக்கும் சரியான அறிவிப்பு எதுவும் இல்லை என்றார். அப்போதுதான் ஒரு மாநகராட்சி அரசு சரியாக செயற்படாவிட்டால் அங்கு வாழும் மக்கள் எவ்வாறான பிரச்சனைகளை எதிர் கொள்கின்றார்கள் என்று. ஒரு சட்டத்தரணியான நான் அன்று முடிவெடுத்தேன். ரொறன்ரோ மாநகர அரசியலுக்குள் புகுந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்று".*

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமையன்று 17ம் திகதி கனடா உதயன் பிரதம ஆசிரியருக்கு வழங்கிய பேட்டியில் ஸ்காபுறோ வடக்கு நகரசபை உறுப்பினர் தெரிவித்தார். உதயன் பிரதம ஆசிரியரின் முதலாவது கேள்வியாக அமைந்த 'தாங்கள் அரசியலுக்குள் வரவேண்டும் என்று தீர்மானித்த நேரம் எவ்வாறு நிகழ்ந்தது? என்பதற்கு பதிலளிக்கும் போதே ஸ்காபுறோ வடக்கு நகரசபை கவுன்சிலர் மையர்ஸ் ஜமால் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கவுன்சிலர் மையர்ஸ் ஜமால் அவர்களிடம் உதயன் பத்திரிகை ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் சில முக்கியமான கேள்விகளைக் தொடுத்தார் அவைகளுக்கு, 'ஸ்காபுறோ வடக்கு கவுன்சிலர் அவர்கள் தகுந்த பதில்களை அளித்தார்.







கவுன்சிலர் அவர்கள் உதயன் பத்திரிகையின் 26 ஆண்டு சமூக அக்கறை கொண்ட அனுபவத்தையும் பத்திரிகையின் வளர்ச்சியையும் பாராட்டியவண்ணம் தனது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்.

அத்துடன் ஜனவரி மாதத்தில் ரொறன்ரோவின் பல பகுதிகளிலும் நடைபெற்ற தமிழர் மரபுரிமை மாதத்தின் கொண்டாட்ட நிகழ்வுகள் தொடர்பாக கருத்து தெரிவித்த கவுன்சிலர் மையர்ஸ் ஜமால் அவர்கள் தான் பங்கு பற்றிய இந்த கொண்டாட்ட நிகழ்வுகளில் தமிழர்களின் பண்பாடு மற்றும் அவர்களது கலைப் படைப்புக்கள் அத்துடன் சமூக அக்கறையுடன் ஒவ்வொரு விழாவில் நடத்தப்பெறுகின்ற விதம் போன்ற அனைத்தையும் பாராட்டி., தான் அடுத்து வருகின்ற ஒவ்வொரு வருடமும் தமிழர் மரபுரிமை மாதத்தின் கொண்டாட்ட நிகழ்வுகளில் தொடர்ச்சியாக கலந்து கொள்ளத் தீர்மானித்துள்ளதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தொடர்ந்து ரொறன்ரோ நகரசபையினால் நிர்வகிக்கப்படும் மிருகக் காட்சிசாலை தொடர்பாக உரையாடப்பெற்றது. ரொறன்ரோ மிருகக்காட்சிச் சாலையான பரந்த நிலப்பரப்பில் ஸ்காபுறோவில் அமைந்துள்ளது. அதன் மேற்பார்வைக் குழுவில் கவுன்சிலர் மையர்ஸ் அவர்கள் பதவி வகிப்பதனால் அவரிடம் உதயன் ஆசிரியர் அவர்கள் மிருகக் காட்சிச் சாலையின் செயற்பாடுகள் பற்றி கேள்விகளைக் கேட்டார்.

ரொறன்ரோ மிருகக் காட்சிசாலையானது கனடாவிலேயே மிகப் பெரிய நிலப்பரப்பில் அமைந்துள்ளது என்றும் வேறு மாகாணங்களிலிருந்தும் பார்வையாளர்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருப்பதாகவும் மிருகக் காட்சிச் சாலையின் செயற்பாடுகளுக்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் தொகை மிகக்குறைவு என்றும் மிருகக்காட்சிசாலை நிர்வாகம் அதன் வருமானத்தையும் பெற்று செலவுகளைச் சமாளிப்பதாகவும் நிர்வாகக் குழு உறுப்பினர் என்ற வகையில் கவுன்சிலர் மையர்ஸ் அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்நது உரையாற்றுகையில் உதயன் பத்திரிகை ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் கவுன்சிலரிடம் ரொறன்ரோ நகரசபையின் ஸ்காபுறோ வடக்கு வட்டாரத்தின் அவசரத் தேவைகள் எதுவென்று நீங்கள் கருதுகின்றீர்கள் என்ற கேள்வியைக் கேட்டார்.

அதற்கு பதிலளித்த கவுன்சிலர் கூறியுதாவது: தகுந்த வதிவிடங்களை வாங்கிக் கொள்ளும் வசதிகள் மற்றும் வருமானம் தரக்கூடிய வேலை வாய்ப்புக்கள் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே எமது வட்டாரத்தின் வரியிறுப்பாளர்கள் பலர் என்னிடம் தொடர்ச்சியாக முறையிடுகின்றார்கள். வசதியான வீடுகள் அவர்களில் பலரின் குடும்பங்களுக்கு இல்லை என்பதே இதன் அர்த்தமாகும். ஒரே வீட்டில் பல குடும்ங்கள் ஒன்றாக வாழ்வதால் குடும்பங்ளுக்கிடையே தனிதத்துவமின்மை, போன்ற பல இடர்பாடுகள் காணப்படுவதாகவும் கவுன்சிலர் தெரிவித்தார்.

இறுதியாக உதயன் பத்திரிகை ஆசிரியர் கவுன்சிலரிடம் உங்கள் வட்டாரத்தில் அல்லது ரொறன்ரோ நகரசபை எல்லைக்குள் வசிக்கும் தமிழ் மக்கள் தொடர்பான தங்கள் அபிப்பிராயத்தை எம்மோடு பகிர்ந்து கொள்வீர்களா? ஏன்று மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதிலளித்த கவுன்சிலர் மையர்ஸ் ஜமால் அவர்கள், "நான் சந்திக்கும் இலங்கைத் தமிழர்கள் அனைவருமே மிகுந்த நட்போடு என்னோடும் எனது சக உத்தியோகத்தர்களோடும் பழகி வருகின்றார்கள். எப்போது என்னை ஊக்கப்படுத்தும் பண்பு கொண்டவர்கள். நான் புதிதாக தேர்ந்தெடுக்கப்பெற்ற கவுன்சிலர் என்ற வகையில் தமது தேவைகளை என்னோடு பகிர்ந்து கொள்கின்ற அதே வேளையில, எமது பணிகளுக்கு தான் எவ்வாறு உதவலாம் என்றும் அவர்கள் எண்ணுவதை நான் அவதானித்துள்ளேன். அத்துடன் 1983 இல் இடம்பெற்ற அவர்கள் தாயகத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் மத்தியில் நிம்மதியான வாழ்க்கையை வேண்டிய கனடாவிற்கு குடியேறிய அவர்களின் கதைகள் மற்றும் வலிகள் ஆகியவற்றை நான் ஆங்கிலப் பத்திரிகைகளுடாக வாசித்து அறிந்தததாகவும், பல மக்கள் வந்து இழப்பிட்டு நிதியைப் பெற்றமை பற்றியும், அவர்கள் தற்போது கல்வி, பொருளாதாரம், என்பவற்றில் சிறப்பாக உள்ளதாகவும் கூறி தனது நேர்காணலை இனிதே நிறைவு செய்து புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டனர்.





## மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

# மலரும் நினைவுகள்

--------------------

80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario
(416) 436-9647

03-03-2023 வெள்ளிக்கிழமை அன்று மாலை சிறப்பு பூஜையுடன்
05-03-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம்
பங்காரு அடிகளாரின் 83வது பிறந்ததினத்தை முன்னிட்டு
சிறப்பு பூஜை தரிசனம்.

அனைத்து சக்திகளும் அன்னையின்
அருளைப்பெற்றுய்யுமாறும் வேண்டப்படுகின்றது.



அத்துடன் தேசிக்காய், வேப்பிலை, பூக்கள் அன்புடன் அன்னைக்கு சமர்ப்பிக்கலாம். வேண்டுவோர்க்கு வேண்டியதைக் கொடுக்கும் கருணை உள்ளம் கொண்ட அன்னை ஆதிபராசக்தி அருள் என்றும் கிடைக்க வேண்டிக்கொள்வோம்.

tasty தமிழா ™

# தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...



பனை வெல்லம்



தேன் நெல்லி

மரச்செக்கு எண்ணெய்கள்



சுக்கு மல்லி காபி தூள்

யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

**Tasty** தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

*MAHAANS PICK & PRESS OIL MILL INC*
*Organic Bulk Store & Water Filling Station*
*5635 Finch Ave East,*
*Unit 5, Scarborough M1B 5K9.*

Call:
416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC


SUBRA
SUBRA MORTGAGE FINANCIAL
MORTGAGE SOLUTIONS
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages Purchase Refinance Renewal Switches Equity lind of Credit
Pre-approvals Self-employed Multi-rental properties New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

# HONOURING OUR HEROES

Hosted By
FRONTLINE COMMUNITY CENTRE

## A COVID-19 COMMEMORATION CONCERT & FAIR!

Celebrating our brave frontline workers. Come out to support our local small businesses and artists!

**March 25th & 26th, 2023**
10 am - 10 pm
MARKHAM FAIRGROUNDS
10801 McCowan Rd, Markham, ON L3P 3J3







## JOIN US FOR

- MULTICULTURAL LIVE MUSIC AND DANCE SHOW
- GUEST SPEAKERS & AWARD CEREMONY
- VENDOR AND FOOD BOOTHS
- FREE ADMISSION & PARKING
- DOOR PRIZES

Funded by the Government of Canada | Canada

**FRONTLINE COMMUNITY CENTRE**

3031 Markham Rd, Unit 27,
Scarborough, ON M1X 1L9

events@fcccanada.org | www.fcccanada.org | GET IN TOUCH 416-840-4425

# யாழ்ப்பாணத்தில் காணியற்ற முஸ்லீம்களை பளையில் குடியேற்ற நடவடிக்கை



யாழ்ப்பாணத்தில் இருந்து 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த முஸ்லீம் மக்களிற்கு பச்சிளைப்பள்ளியில் நிலம் வழங்க முயற்சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்று தற்போது மீள் குடியேறிய முஸ்லீம் மக்களில் 300 பேரிற்கு இன்றுவரை சொந்த நிலம் இன்மை காரணமாக வதிவிடத்தை அமைக்க முடியவில்லை எனவும் அதற்காக பச்சிளைப்பள்ளியில் உள்ள காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவின் ஆளுகையில் உள்ள நிலத்தில் இருந்து 300 குடும்பங்களிற்கு நிலம் வழங்குமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

இவ்வாறு முன் வைக்கப்பட்ட கோரிக்கை வடக்கு மாகாண ஆளுநரினால் பரிசீலிக்கப்பட்டு பச்சிளைப்பள்ளியில் காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவின் கீழ் இனம் காணப்பட்ட 45 ஏக்கர் நிலப்பரப்பில் இருந்து குடும்பம் ஒன்றிற்கு தலா 2 பரப்புக் காணி வீதம் வழங்க ஆளுநர் பரிந்துரைத்துள்ளார்.

இதற்கமைய இந்த 300 குடும்பங்களிற்கும் தலா 2 பரப்புக் காணி வீதம் வழங்க நடவடிக்கை இடம்பெறுகின்றது. இதனால் இந்த 45 ஏக்கரும் விரைவில் பகிர்ந்தளிக்கும் வகையில் வரைபடம் தயாரிக்கும் பணிகள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமைப் பணிமனையால் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்வாறு பச்சிளைப்பள்ளி காணிகளை வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநரே காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவைக் கோருவதாகவும் பச்சிளைப்பள்ளியிலேயே பிறந்து வளர்ந்த 640 குடும்பங்கள் குடியிருக்க நிலம் இன்றி கடந்த 12 ஆண்டுகளாக நிலம் கோருகின்றபோதும் அது தொடர்பில் எவருமே சிந்திக்கவில்லை என அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





# “நீதிமன்ற கட்டளையை மீறி குருந்தூர்மலையில் பௌத்த விகாரை”

- எமது யாழ் செய்தியாளர்



நீதிமன்றம் கட்டளை இட்டபின்பும் அதனை மீறி குருந்தூர்மலையில் பௌத்த கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதாக துரைராசா ரவிகரன் பொலிசில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குருந்தூர்மலையில் பௌத்த கட்டுமானப் பணிகள் இனி மேற்கொள்ளப்படவே கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றக் கட்டளையை மீறி அங்கு கட்டுமானப் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இப்பகுதியில் பொலீசார் பாதுகாப்புக்கடமையில் தொடர்ந்தும் ஈடுபட்டிருக்கும் நிலையிலும் அங்கே எவ்வாறு நீதிமன்ற கட்டளையை மீறி பௌத்த கட்டுமானப்பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன எனக் கேள்வி எழுப்பியே வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடொன்றினைப் பதிவுசெய்துள்ளார்.



முல்லைத்தீவு பொலிசில் முறைப்பாடு பதிவு செய்தபின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், “குருந்தூர்மலையில் விகாரைக்குரிய கட்டுமானப்பணிகள் தற்போது முடிவுற்றிருப்பதை எம்மால் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

குருந்தூர்மலைக்கட்டுமானப் பணிகளை இடைநிறுத்தும்படி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்று உத்தரவிட்டபின்னரும்கூட அங்கு கட்டுமானப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது”.

அதிலும் குறிப்பாக 12.06.2022 அன்று, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி கபோக் கல்லினால் ஆன புத்தர் சிலை ஒன்றினை நிறுவுவதற்கும், விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்குமான முயற்சியில் பௌத்த தேரர்களும், இராணுவத்தினரும், தென்னிலங்கையைச் சார்ந்த சிலரும் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

“இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்து நாம் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தோம்.

அவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காக நாம் போலீசாரால் கைதுசெய்யப்பட்டோம்”.


போலீசாரல் தாங்கள் கைதுசெய்யப்பட்டு விடுதலையான பிற்பாடு, குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளை மீறப்பட்டுள்ளது என்ற விடயத்தினை நாம் நீதவானின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்ததாகவும் அவர் கூறினார்.



அதன்படி 19.07.2022 அன்று இது தொடர்பில் ஆராய்ந்த நீதவான், குருந்தூர்மலைக்கும் நேரில் வந்து நிலமைகளைப் பார்வையிட்டதுடன், அன்றைய தினமே நீதிபதி கட்டளையொன்றையும் வழங்கியிருந்தார் என்று குறிப்பிட்ட துரைராசா ரவிகரன், நீதவான் பிறப்பித்த அக்கட்டளையில், 12.06.2022 அன்று எவ்வாறு அந்தவிகாரையின் கட்டுமானப்பணிகள் காணப்பட்டதோ, அவ்வாறே இருக்கவேண்டும். அதற்குமேல் எவ்வித கட்டுமானப் பணிகளும் இனி மேற்கொள்ளக்கூடாதென உத்தரவிட்டிருந்தார் என்பதை ஆதாரங்களுடன் முன்வைத்தார்.

அதனைக் கண்காணிக்கும் பொறுப்பு பொலிசாரிடமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது குருந்தூர்மலையில்


Acknowledgement of Complaint

Police Station

Date 2023/02/23

Name of Complainant

Nature of Complaint

I. B. Reference

Signature of Recording Officer

Name, Rank & Reg. No. of Recording Officer



கட்டுமானப்பணிகள் மிக வேகமாக இடம்பெற்று, பௌத்த விகாரை அங்கு முழுமையாக அமைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தோம். இவற்றின் அடிப்படையில் நான் முல்லைத்தீவு பொலிஸ்நிலையத்திற்குச்சென்று, முறைப்பாடொன்றினைப் பதிவுசெய்திருந்தேன் என்றார் ரவிகரன்.

குறிப்பாக நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி குருந்தூர்மலையில் கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வருகின்றன என்பதை தாம் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளதுடன்.

இந்த கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் ஜெயத்திலக என்பவரின் பெயரைக் குறிப்பிட்டதுடன், கல்கமுவ சாந்தபோதி தேரர், சப்புமஸ்கட குருந்தூர்மலை விகாரதிபதி ஆகியோரது பெயர்களைக்குறிப்பிட்டு முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



“ருந்தூர்மலையில் தொடர்ச்சியாக பொலீசார் கடமையில் இருந்தும்கூட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவே பொலீசார் இதற்கு பெறுப்புக்கூறவேண்டும்” என்ற வகையிலே பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி அமரசிங்விற்கு எதிராகவும் முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளார் ரவிகரன்.

“எதிர்வரும் 02.03.2023 அன்று குருந்தூர்மலை தொடர்பான வழக்கொன்று விசாரணைக்கு வருகின்றது. அப்போது இந்தவிடயத்தை எமது சட்டத்தரணிகளுக்கு தெரியப்படுத்தி, நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரவிருக்கிறேன்”.

# இலங்கை: "F" சொல்பற்றிய அதிகாரப் பகிர்வு, பிரிவினை மற்றும் தற்போதைய விவாதங்கள்

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*

இலங்கையில், இறையாண்மை மக்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. அது மாற்றிக்கொடுக்க முடியாததாகவும் பிரிக்க முடியாததாகவும் இருக்கும். இவ்வாறு இறையாண்மை ஒட்டுமொத்த இலங்கை மக்களிடமே முழுமையாக இருக்கும் என அறிவிக்கப்படுகிறது. இலங்கை மக்களின் இறையாண்மை பிரிக்க முடியாதது. எனவே மத்திய மற்றும் அலகுகளுக்கு இடையில் ஒரு கூட்டாட்சி பண்புடைய இறையாண்மைப் பிரிவு வெளிப்படையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒரு பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கப்பட முடியாத நாடாக இருக்க வேண்டும்: அரசியலமைப்பின் கீழ் பிரிவினை அனுமதிக்கப் படமாட்டாது. பிரிவி-னையைத் தடுக்க அரசியலமைப்பில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் இருக்க வேண்டும்: இலங்கை அரசு "பிரிக்கப்படாதது மற்றும் பிரிக்க முடியாதது" என அரசியலமைப்பில் குறிப்பாகக் குறிப்பிட வேண்டும் என்று அறிக்கை கூறுகிறது. மேலும் அதில் பின்வருமாறு குறிப்பிட வேண்டும்: "இலங்கை ஆட்புலத்தில் எந்தப் பகுதி-யையும் தனி அரசாகவோ அறிவிக்கவோ அல்லது எந்தவொரு மாகாணத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியையும் இலங்கையிலிருந்து பிரிந்து செல்லுமாறு வாதாடவோ அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ எந்தவொரு மாகாண சபைக்கோ அல்லது பிற அதிகார சபைக்கோ அதிகாரம் கிடையாது."

அதிகபட்ச அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும்: வழிகாட்டுதல் குழு, துணைக் குழுக்கள் மற்றும் பிறவற்றின் முன் சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பிப்புகளில் துணைக் கொள்கை ("அதாவது, மிகக் குறைந்த அடுக்குகளால் கையாளப்படக்கூடியது எதுவாக இருந்தாலும், அதற்கு வழங்கப்பட வேண்டும்") பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மக்கள் பிரதிநிதித்துவக் குழுவும், மைய-சுற்றயல் **(Centre-Periphery Relation)** உறவுகளுக்கான துணைக் குழுவும் உள்ளூர் அதிகாரிகளுக்கு அதிக அதிகாரமும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளன. அரசாங்கத்தின் மூன்று அடுக்குகளுக்கு இடையே உள்ள துறைகள் மற்றும் செயல்பாடுகளை ஒதுக்கீடு செய்வதில் இந்த கொள்கை வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று வழிநடத்தல் குழு பரிந்துரைத்தது. பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் கிட்டத்தட்ட முப்பது ஆண்டு பட்டறிவுகளை கருத்தில் கொண்டு, மத்திய மற்றும் மாகாணங்களின் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும் என்று அதிகாரப் பரவலாக்கத்தின் ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிங்களப் பெரும்பான்மை கொண்ட ஏழு "தெற்கு" மாகாணங்களின் முதலமைச்சர்களிடமிருந்து அதிகாரப் பகிர்வு தொடர்பான சிறந்த திட்டங்கள் வந்துள்ளன. முதலமைச்சர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். உண்மையில், முதலமைச்சர்கள் மாநாடு பல சந்தர்ப்பங்களில் இது போன்ற முன்மொழிவுகளை முன்வைத்துள்ளது. மாகாண சபை முதலமைச்சர்கள் முன்வைத்த பல பரிந்துரைகளை வழிநடத்தல் குழு ஏற்றுக் கொண்டுள்ளது. அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்கும் இடையில் தெளிவாகவும் பொருள்மயக்கமற்றதாகவும் பிரிக்கப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டம் இலங்கையின் உச்ச சட்டமாக இருக்கும்: தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்திற்குப் பிந்தைய நீதித்துறை மறுஆய்வை அனுமதிக்கவில்லை. ஒரு மசோதா, ஆனால் நாடாளுமன்றத்தின் சட்டம் அல்ல, அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. அதிகார வரம்புக்குட்பட்ட விவகாரங்கள் தொடர்பான பல சட்டங்கள் அறைகூவலின்றி நிறைவேற்றப்பட்டமைக்குப் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. அரசியலமைப்புச் சட்டம் உச்ச சட்டமாக இருக்க வேண்டும் என்பதன் பொருள், சட்டம் இயற்றப்பட்ட பின்னர் மறுஆய்வு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்படும், இது நீதித்துறை துணைக் குழுவின் பரிந்துரையும் ஆகும்.

அரசியலமைப்பைத் திருத்துவதற்கான அதிகாரம், அல்லது அரசியலமைப்பை இரத்துசெய்துவதற்கும் மாற்றுவதற்கும் அதிகாரம், அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் நாடாளுமன்றத்திற்கும் இலங்கை மக்களுக்கும் (பொருந்தக் கூடிய இடங்களில்) இருக்கும். அரசியலமைப்புச் சீர்திருத்தத்தம் தொடர்பான வாக்கெடுப்பில் வாக்களிப்பது ஒட்டுமொத்த இலங்கை மக்களே அன்றி, அதிகாரப் பகிர்வு பிரிவுகளின் மக்கள் அல்ல.


மாநிலத்தின் தன்மை குறித்து, பின்வரும் கருத்து ஆராயப்பட்டது:

சிறிலங்கா (இலங்கை) ஒரு சுதந்திரமான, இறையாண்மை மற்றும் சுயாதீனமான குடியரசு ஆகும், இது ஒரு ஏக்கிய ராஜ்ய / ஒருமித்த நாடு ஆகும். இது அரசியலமைப்பில் வகுக்கப்பட்ட அதிகாரத்தைச் செயல்படுத்தும் மத்திய மற்றும் மாகாணங்களின் நிறுவனங்களை உள்ளடக்கியது. இந்த உறுப்புரையில் (**Article**) ஏக்கிய ராஜ்ய/ஒருமித்த நாடு **(an aekiya rajyaya /orumiththa nadu)** என்பது பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கப்பட முடியாத ஒரு நாடு என்று பொருள்படும்., மேலும் இதில் வழங்கப்பட்டுள்ளபடி, அரசியலமைப்பைத் திருத்துவதற்கும், அல்லது அரசியலமைப்பை இரத்து செய்வதற்கும், மாற்றுவதற்குமான அதிகாரம் இந்த அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ளபடி இலங்கையின் நாடாளுமன்றத்திற்கும் மற்றும் மக்களுக்கும் உள்ளது.

ஒரு மாகாண சபை தனது அதிகாரங்களை பிரிந்து செல்வதற்குப் பயன்படுத்தலாம் என்ற அச்சங்களைத் தணிப்பதற்காக, குடியரசின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு ஒரு "தெளிவான மற்றும் தற்போதைய ஆபத்து" இருந்தால் அதில் தலையிடுவதற்கு அரசியலமைப்பு ரீதியாக மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று முன்மொழிந்தது. இத்தகைய தலையீடு நாடாளுமன்ற ஒப்புதல் மற்றும் நீதித்துறை மறுஆய்வுக்கு உட்பட்டது.

அறிக்கையில் உள்ள கொள்கைகள் மற்றும் வடிவமைப்புகள் குறித்து வழிநடத்தல் குழுவின்
உறுப்பினர்களின் அவதானிப்புகள் மற்றும் கருத்துக்கள் இடைக்கால அறிக்கையில் உள்ளன. பிரதமர் விக்ரமசிங்க, தனது கட்சி (ஐதே.க) முழு அறிக்கையையும் ஆதரிக்கும் என்று குழுவுக்குத் தெரிவித்தார். சனாதிபதி சிறிசேன தலைமையி-லான
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொதுவாக அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக உள்ளது. ஆனால் அதன் முன்மொழிவுகள் அதன் சொந்த முதலமைச்சர்களின் முன்மொழிவுகளைப் போலக் காணப்படவே இல்லை.

எதிர்பார்த்தது போல், முன்னாள் சனாதிபதி இராசபக்சாவின் தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியானது, மாகாண சபைகளின் தற்போதைய அதிகாரங்களில் சிலவற்றைக் குறைக்க விரும்புவதுடன், அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவளிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு **(Tamil Nationalist Alliance (TNA)** இதில் சமஷ்டிக் கட்சி **(FP)** ஆதிக்கம் செலுத்தும் பங்காளியாக உள்ளது, அதே சமயம், இலங்கை ஒரு ஐக்கிய/பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கப்பட முடியாத ஒரு நாட்டிற்குள் ஒரு கூட்டாட்சி நாடாக இருக்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திய போதிலும் . அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய கொள்கைகளை இரண்டு பிர-தான கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால், அதனுடன் உடன்படுவதைப்பற்றி எண்ணிப்பார்க்கத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிலைப்பாடு தென்னிலங்கையில் பர-வலாக வரவேற்கப்பட்டாலும், தமிழ்த் தீவிரவாதிகளால் அந்த நிலைப்பாடு கடுமையாக விமர்சிக்கப்பட்டது.



**ஜெயம்பதி விக்ரமரத்ன**

## முடிவுரை

மோதல்கள் நிறைந்திருக்கும் ஒரு பல் கலாச்சார
சமூகத்தில், ஒரு சனநாயக கட்டமைப்பிற்குள் அனைத்துச் சமூகங்களுக்கும் தேவையான அதிகாரத்தை வழங்கும் ஒரு தீர்வு மோதலை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்பது பல பார்வையாளர்களுக்கு உண்மையாக இருக்கலாம். பெரும்பான்மையினரின் எதிர்ப்பை எதிர்பார்க்கலாம் என்றாலும், அதிகாரப்பகிர்வு பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று உண்மையிலேயே அஞ்சுபவர்கள் பலர் இருக்கலாம். வன்முறை மோதல்களைக் அனுபவித்த நாடுகளில் இது நடக்கிறது, இதற்கு சிறிலங்கா ஒரு எடுத்துக்காட்டு. அத்தகைய அச்சங்களைத் துடைப்பதற்குப் பதிலாக, அத்தகைய அச்சங்களை மிதமாக வைத்திருப்பது சிறந்தது. அரசியலமைப்பை உருவாக்குபவர்கள் நடைமுறைக்குரியவர்களாக இருக்க வேண்டும். மற்றும் சூழ்நிலையின் தனித்துவங்களைக் கருத்தில் கொண்டு குழப்பத்துக்கு வழிவகுக்கும் மொழியைத் தவிர்க்க வேண்டும். **(முற்றும்)**

**Further Reading**

**Ranjith Amarasinghe et al, Twenty Two Years of Devolution: An Evaluation of the Working of Provincial Councils in Sri Lanka (Institute for Constitutional Studies 2010).**

**Rohan Edrisinha et al (eds)>,Power-sharing in Sri Lanka: Constitutional and Political Documents, 1926-2008 (Centre for Policy Alternatives 2008).**

**Asanga Welikala (ed), A New Devolution Settlement for Sri Lanka(Centre for Policy Alternatives 2016).**

**[1] Ceylon: Report of the Commission on Constitutional Reform (Cmd 6677, 1945).**

**[2] Article 157A (5).**

**[3] SC Spl. 03/2014, SCM 04.08.2017.**

**[4] Panel of Experts appointed to service the All Party Representative Committee, Report of Group 'A' (2006) in Rohan Edrisinha et al (eds), Power-sharing in Sri Lanka: Constitutional and Political Documents, 1926-2008 (Centre for Policy Alternatives 2008) 784, 785.**

**[5] Report on Public Representations on Constitutional Reform (Colombo: Public Representations Committee on Constitutional Reform, 2016) 20.**

**[6] <http://english.constitutionalassembly.lk/images/pdf/interim-report/ReportE%20CRR.pdf> accessed 02 December 2017.**

**[7] For the constitutional framework of devolution and important legal issues that arose, see Jayampathy Wickramaratne, 'Legal Aspects of Devolution in Sri Lanka' in Jayampathy Wickramaratne, Towards Democratic Governance in Sri Lanka: A Constitutional Miscellany (Institute for Constitutional Studies, 2014) 137-233.**

(இந்தக் கட்டுரை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டாலும் 13 ஏ திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதுபற்றி இன்று ஆதரவா-கவும் எதிராகவும் நடைபெறும் வாதத்துக்கு இன்னமும் பொருத்தமானது ஆகும். ஆங்கில மூலத்தை **http://50shadesoffederalism.com/case-studies/sri-lanka-devolution-secession-and-current-debates-on-the-f-word/** என்ற இணையதள முகவரியில் படிக்கலாம். அவரது மின்னஞ்சல் **jwickramaratne@yahoo.com.**
*தமிழாக்கம்: கனடா நக்கீரன்)*



# அன்னையின் அவதார தினத்தில் தெய்வீக அனுபவம் வினையையும், வெல்லலாம்



மேல்மருவத்தூரில் அன்னை ஆதிபராசக்தியே குரு வடிவில் அவதரித்து அருள்பாலிக்கும். அன்னையை முற்றிலும் சரணடைந்து வாழும் பக்தர் கூட்டம் அனேகம். ஊழ்வினையைக் கழிக்க மனித உருவெடுத்து இவ்வுலகிற்கு வந்திருக்கும் நாம் கடன் கழிய டிபுறப்படவேண்டியதுதான் உண்மை வாழ்க்கை. அதை அம்மா தன் ஒவ்வாரு வார்த்தையிலும் மக்களுக்கு பல வழிகளிலும் எடுத்துரைக்கின்றா. கலியுக கேடுகளிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கரைசேர்க்க வந்திருக்கின்ற கருணைத் திருவுருவாம் நம் ஆன்மீக குரு அருள்திரு அம்மா அவர்கள்.

தம் அவதார காலத்தில் சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களும் மனநிலையில் மாற்றம் கண்டு. அவர் தம் வாழ்வு ஏற்றம்பெற, ஏற்றவழி தருமநெறி ஒன்றே என்பதை நமக்கு அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள். தருமம் தலைமுறைறையே காக்கும். இருப்பவனிடம் வாங்கி இல்லாதவர்களுக்கு கொடு என்கிறார். அன்னையின் இப்பொன்னான நன்நாளில் அவர்பாதம் பணிந்து சிலவற்றைப் பார்ப்போம்.

பழையன, புதியன என்று எத்தனை சமுதாய மாற்றம் ஏற்பட்டாலும் அவரவர் பாவ, பண்ணியப் பலன்களை அவரவர்களே அனுபவித்துக் கழிக்கவேண்டும். பாவமாவது, புண்ணியமாவது என்று அலட்ச்சியப்படுத்தி விட்டு, ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவற்றைக் காற்றிலே பறக்கவிட்டு வாழத்தொடங்கியதன் விளைவுகளே உலகம் இப்போது அனுபவிக்கத்தொடங்கியிருக்கின்றது.

உன் உள்ளம் சுத்தமாக இருந்தால் நோய் வராது என்கிறார் அன்னை. தீய எண்ணம் ஒன்று மனதில் புகுந்துவிட்டால் உயிரணு பாதிக்கப்படுகின்றது என்கிறார்கள் சித்தர்கள். சில நோய்கள் கர்ம நோய்கள் என்றே சித்த மருத்துவம் குறிப்பிடுகின்றது. நோய் வருவதற்கு என்னென்ன காரணங்கள் என அதர்வண வேதம் கூறுகின்றது. முற்பிறப்பில் செய்த பாவம், கடவுளை அவமதித்தல், எதிரிகள் ஏவல், கண்ணூகள் என்பன ஒவ்வொருவிதமான நோயாக வந்து தாக்குகின்றது.

தேவசாபம், வி'ஷ்ணுசாபம், பிரம்ம சாபம், பிதுர் சாபம், நாக சாபம், பெரியோர் சாபம் என்று சில சாபங்களைக் குறிப்பிடுகின்றன. இவற்றுள் பிதுர் சாபம், நாக சாபம், பெரியோர் சாபம், பெண்கள் சாபம் காரணமாக அல்லல்படும் குடும்பங்கள் அதிகம். இறந்து போன முன்னோர்களைும், தாய், தந்தையையும் மறவாமல் போற்றி வழிபட வேண்டும் என்பது தரும சாத்திரங்கள் கூறுகின்றன.

ஒரு இஸ்ட தெய்வத்தைக் தேர்ந்தெடுத்துக் கொண்டு அன்றாடம் வழிபாடு செய்து தெய்வக் கடன்களை தீர்க்க வேண்டும். இறந்த முன்னோர்க்கு சிரார்த்தம், தர்ப்பணம் செய்து நீத்தார் கடன்களைத் தீர்க்க வேண்டும். விருந்தினர்க்கு உணவளித்து மனிதர் கடன்களை தீர்க்க வேண்டும். காக்கை, நாய் போன்ற வாயில்லா ஜீவன்களுக்கு உணவளித்து பூதக் கடனைத் தீர்க்கவேண்டும். இறந்து போன முன்னோர்களுக்கு உரிய முறையில் செய்ய வேண்டிய கடன்களைத் தீர்க்கவில்லையேல் என்னென்ன விபரீதங்கள் ஒரு குடும்பத்திற்கு ஏற்படும் என்று கருட புராணம் விரிவாகக் கூறுகின்றது.

உருவத்தைப் பார்க்கின்றவன் மனிதன், உள்ளத்தைப் பார்ப்பவன் கடவுள், இரண்டையும் பார்ப்பவள் நம் அன்னை. இந்தக் கலியுகத்து மக்களின் வினைக் கழிவிற்கு அன்னை இந்த அவதார காலத்தில் எங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளை தவறவிடாமல் நம் கைகளால் சுயம்பிற்கு அபிடேகம் செய்கிற வாய்பை பெறுங்கள் என்கிறார்.

இரு கை கூப்பி நீயும் வணங்கிடு!
இருதிரு வடியைப் பற்றிக் கொள்!
சித்தம் தெளிய வழிதேடு!
சித்தர் உறவை நீ நாடு ! ஓம் சக்தி

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS CR PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# பழனிசாமி தரப்பினரால் நடத்தப்பட்ட அதிமுக பொதுக்குழு செல்லும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு முழு விவரம்

ஜூலை 11ம் தேதி நடந்த அதிமுக பொதுக்குழு செல்லும் என முக்கிய தீர்ப்பளித்துள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அந்த பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லுமா, செல்லாதா என்பதை சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பிரதான சிவில் வழக்குகள்தான் முடிவு செய்யும் என உத்தரவிட்டுள்ளனர்.கடந்த 2022 ஜூலை 11ம் தேதிநடத்தப்பட்ட அதிமுக பொதுக்குழு கூட்டத்தில், இடைக்கால பொதுச் செயலாளராக பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒருங்கிணைப்பாளரான ஓ.பன்னீர்செல்வமும், அவரது ஆதரவாளர்களும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதை எதிர்த்து ஓபிஎஸ் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், இந்த விவகாரம் தொடர்பாக மீண்டும் சென்னை உயர் நீதிமன்றமே விசாரிக்க உத்தரவிட்டது.அதன்படி இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, ஜூலை 11ம் தேதி நடந்த அதிமுக பொதுக்குழு செல்லாது என்றும், கடந்த ஜூன் 23ம் தேதிக்கு முந்தைய நிலையே தொடர வேண்டும் என்றும், 30 நாட்களுக்குள் இருவரும் இணைந்து பொதுக்குழுவை கூட்ட வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து இபிஎஸ் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த 2 நீதிபதிகள் அமர்வு கடந்த ஆண்டு செப்.2ம்தேதி பிறப்பித்த இடைக்கால உத்தரவில், ‘‘ஜூலை 11ம் தேதி நடந்த அதிமுக பொதுக்குழுக் கூட்டம் செல்லும். ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகளுக்கு ஜூன் 23 பொதுக்குழுவில் ஒப்புதல் அளிக்காத சூழலில், அந்த பதவிகள் காலாவதியாகி விட்டதா என்றவிவகாரம் தொடர்பாக நாங்கள் எந்த கருத்தும் கூற விரும்பவில்லை. எனவே, தனி நீதிபதி உத்தரவை ரத்து செய்கிறோம்’’ என்று தீர்ப்பளித்தனர்.இந்த உத்தரவை எதிர்த்து ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளரான அம்மன் வைரமுத்து ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி, ரிஷிகேஷ் ராய் தலைமையிலான அமர்வில் இந்த வழக்கு விசாரணை நடந்தது. ஓபிஎஸ் மற்றும் வைரமுத்து தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் ரஞ் சித்குமார், குருகிருஷ்ணகுமார் ஆகியோரும், இபிஎஸ் தரப்பில் மூத்த வழக்கறிஞர் சி.ஆர்யமா சுந்தரமும், அதிமுக அவைத்தலைவர் மற்றும் அதிமுக தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் சி.எஸ்.வைத்தியநாதன், முகுல் ரோஹ்தகியும் ஆஜராகி வாதிட்டனர்.



அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தனர். இந்நிலையில், இந்த வழக்கில் நீதிபதிகள் நேற்று தீர்ப்பளித்தனர். தீர்ப்பு விவரம்:ஜூலை 11ம் தேதி நடத்தப்பட்ட அதிமுக பொதுக்குழு கூட்டம் செல்லாது என அறிவிக்கக் கோரி ஓபிஎஸ்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மேல்முறையீட்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்த பொதுக்குழு உரிய வழிமுறைகளை பின்பற்றி, சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டுதான் நடத்தப்பட்டுள்ளது. எனவே, அதிமுக பொதுக்குழு செல்லும் என சென்னை உயர்நீதிமன்ற 2 நீதிபதிகள் அமர்வின் உத்தரவை உறுதி செய்கிறோம்.

ஆனால், பொதுக்குழு தீர்மானங்களுக்கு எதிராக எங்களிடம் எந்த கோரிக்கையும் வைக்கப்படவில்லை என்பதால், தீர்மானங்கள் குறித்துஎந்த உத்தரவும் பிறப்பிக்க விரும்பவில்லை. அந்த தீர்மானங்கள் செல்லுமா, செல்லாதா என்பதை சென்னைஉயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பிரதான சிவில் வழக்குகள்தான் முடிவு செய்யும்.அதேபோல, இந்த தீர்ப்பு, நிலுவையில் உள்ள பிரதான வழக்குகள் மீதான விசாரணைக்கு எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அந்தவழக்குகளை சுதந்திரமாக, சட்டத்துக்கு உட்பட்டு விசாரித்து தீர்வுகாண வேண்டும்.தனி நீதிபதி உரிய அம்சங்களை கருத்தில் கொள்ளாமல், பொருத்தமற்ற உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

இதில் 2 நீதிபதிகள் அமர்வுசரியான உத்தரவை பிறப்பித்துள்ளது.ஓபிஎஸ், இபிஎஸ் ஆகியஇரு தரப்பும் இணைந்து, ஒற்றுமையாக செயல்பட தயாராக இல்லைஎன்பதே உண்மை. நடைமுறைகளுக்கு சாத்தியமற்ற செயல்பாடுகளை நீதிமன்றம் ஒருபோதும்உத்தரவாக பிறப்பிக்காது. இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர். தமிழகம் முழுவதும் அதிமுகவினர் கொண்டாட்டம்சென்னை: கடந்த 2022 ஜூலை 11ம் தேதி பழனிசாமி தரப்பில் கூட்டப்பட்ட அதிமுக பொதுக்குழு கூட்டம் செல்லும் என்று உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது. தொலைக்காட்சிகளில் இதுதொடர்பான செய்திகள் வெளியானதும், சென்னை ராயப்பேட்டையில் அதிமுக தலைமை அலுவலகம் முன்பு கட்சித் தொண்டர்கள் ஏராளமானோர் திரண்டனர். பட்டாசுகளை வெடித்தும், வெற்றிச் சின்னம் காட்டியும் உற்சாக நடனமாடினர். பரஸ்பரம் இனிப்பு வழங்கி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். இதேபோல, தமிழகம் முழுவதும் அதிமுக தொண்டர்கள் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் இந்த வெற்றியை கொண்டாடினர்.

ஓபிஎஸ் அணிக்கு பெரிய பின்னடைவு: ஜெயலலிதா மறைவுக்கு பிறகு, இரு அணியாக பிரிந்து நின்ற பழனிசாமி ஓ.பன்னீர்செல்வம் அணிகள் 2017 ஆகஸ்டில் இணைந்தபோதும், அடுத்தடுத்த நிகழ்வுகள் ஓபிஎஸ்ஸுக்கு பின்னடைவாகவே அமைந்தன. ஒருங்கிணைப்பாளராக இருந்தாலும், எந்த முடிவையும் இணை ஒருங்கிணைப்பாளரான இபிஎஸ்ஸிடம் கேட்டுதான் எடுக்க வேண்டிய நிலை இருந்தது.

2019 நாடாளுமன்ற தேர்தல், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல், 2021 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் வேட்பாளர்கள் தேர்வு, தொடர்ந்து நடைபெற்ற எதிர்க்கட்சி தலைவர் தேர்வு ஆகியவற்றிலும் இபிஎஸ் கையே ஓங்கியிருந்தது. நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலிலும் இபிஎஸ்தான் அனைத்தையும் முடிவு செய்தார். அடுத்தடுத்து நடந்த நிர்வாகிகள் கூட்டத்தில் ஒற்றைத் தலைமை என இபிஎஸ் பெயர் அடிபட, அதை தடுக்க முடியாமல் ஓபிஎஸ் திணறினார்.

இபிஎஸ் இடைக்கால பொதுச் செயலாளராக அறிவிக்கப்பட்டாலும், அதை தேர்தல் ஆணையம் ஏற்காதது ஓபிஎஸ் தரப்புக்கு ஆறுதலாக அமைந்தது. ஆனாலும், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் சின்னம் தொடர்பான வழக்கில், இபிஎஸ் ஆதரவாளரான அவைத் தலைவர் தமிழ்மகன் உசேனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது, ஓபிஎஸ்ஸுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தொண்டர்கள் மத்தியில் செல்வாக்கு சரிந்துவிடக்கூடாது என்பதற்காக, ‘இரட்டை இலை’ சின்னத்துக்கு ஆதரவு என அறிவித்து, தனது வேட்பாளரை திரும்ப பெறும் நிலைக்கு தள்ளப்பட்டார். இந்நிலையில், பொதுக்குழு செல்லும் என்ற தீர்ப்பு, ஓபிஎஸ்ஸுக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

# பாஜகவை கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்: திருமாவளவன் அறிவிப்பு

மக்கள் விரோத பாஜகவை கண்டித்து சென்னையில் வரும் பிப்ரவரி 28 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தொல். திருமாவளவன் அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக விசிக தலைமைச் நிர்வாகக் குழு கூட்ட தீர்மானம் குறித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,’’தமிழகத்தில் சட்டம்ஒழுங்கை சீர்குலைத்து, மாநிலத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு முயலும் சனாதன சக்திகளைக் கண்டித்து சென்னையில் பிப்ரவரி 28ம் நாள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என நேற்று (பிப்.22 ) கூடிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமை நிர்வாகக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழமைக் கட்சிகளின் தலைவர்களையும் பங்கேற்க அழைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து அதனைச் செயல்பட விடாமல் முடக்குவதற்குத் தமிழகத்தில் திட்டமிட்ட முறையில் பாஜகவும் அதன் துணை அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன. மத அடிப்படையில் வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதோடு சாதி வெறியையும் ஊக்கப்படுத்தி வருகின்றன.

தனிநபர்களுக்கு எதிராகத் தரங்கெட்டுப் பேசுவது, வீம்புக்கு வம்பிழுக்கும் வகையில் வேண்டுமென்றே அரசியல் தலைவர்களுக்கு எதிராக அவதூறுகள் பரப்புவது ; ஆத்திரமூட்டும் வகையில் ஆபாசமான விமர்சனங்களின் மூலம் இழிவுபடுத்துவது; தாங்களே தங்களுக்கு எதிராகப் பெட்ரோல் குண்டுகளை வீசிக்கொண்டு வன்முறைகளைத் தூண்டும் வகையில் நாடகமாடுவது; கூலிப்படையினரை ஏவி கொலைகள் செய்வது; ஊடகத்தினரை மிரட்டுவது; சமூக ஊடகங்களில் பொய்ச் செய்திகளைப் பரப்பி சமூகத்தில் பதற்றத்தை ஏற்படுத்துவது என அவர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர்.

இத்தகைய மக்கள்விரோத போக்குகளுக்கு தமிழக ஆளுநரும் துணையாக இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. அத்துடன், அவரது நடவடிக்கைகள் சனாதன சக்திகளின் வன்முறை போக்குகளுக்கு இந்திய ஒன்றிய அரசின் மறைமுகமான ஆதரவும் இருக்கிறது எனக் காட்டுகிறது. மேலும், சமூக விரோதிகளின் துணையோடு எதிர்க்கட்சியினரை மட்டுமின்றி சொந்த கட்சிக்காரர்களையே அவதூறுகளின் மூலம் அச்சுறுத்துவது என்பதை பாஜகவினர் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக, அந்தக் கட்சியில் இருக்கும் பெண்களையே வெளிப்படையாக ‘ப்ளாக் மெயில்’ செய்கின்றனர். இத்தகைய சமூகவிரோத மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் நபர்களை ஊக்குவிக்கும் ஆளுநர், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியாக இல்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்தவும் தொடர்ந்து முயற்சித்து வருகிறார்.

குறிப்பாக, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்று ஆளுநர் உரையில் இடம் பெற்றிருந்த வாசகத்தைப் படிக்க மறுத்த ஆளுநர், இன்றும் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து திமுக அரசுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டிருக்கிறார். தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் கடமையைச் செய்யாமல், ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலுக்கு அதிமுகவுக்கு பிரச்சாரம் செய்வதுபோல அவரது பேச்சுகளும் அறிக்கைகளும் உள்ளன.

இவை எல்லாமே வட மாநிலங்களில் செய்வதைப் போல தமிழகத்திலும் செய்து இதனை ஒரு கலவர பூமியாக மாற்றும் சதித்திட்டத்தோடு செய்யப்படுகின்றன. சனாதனப் பயங்கரவாதிகளின் இத்தகைய சதியை முறியடித்து தமிழகத்தில் சமூக அமைதியையும் சமய நல்லிணக்கத்தையும் காப்பாற்ற வேண்டிய கடமை சனநாயக சக்திகளான நம் அனைவருக்கும் உள்ளது.

அதனடிப்படையில் தான் சனாதன சக்திகளுக்கு எதிராக இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தீர்மானித்துள்ளது. எனவே, பிப்ரவரி 28ம் நாள் சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஒருங்கிணைக்கும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சனநாயக சக்திகள் திரளாகப் பங்கேற்க வேண்டுமாறு அழைப்பு விடுக்கிறோம்.’’ இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1037



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் மட்டக்களப்பு

"பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப்பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவர்க்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான் மறவாமல் நின்று ஏத்துவனே."

ஈழத்தில் கண்ணகி வழிபாடு சிறப்புப்பெற வழி செய்தவன் இலங்கைக் கஜவாகு மன்னன் என கண்ணகி வழிபாட்டின் ஆரம்பம் கூறப்பட்டபோதிலும், மட்டக்களப்பிலுள்ள செட்டிபாளையத்திலே கண்ணகி கோயில் உருவான வரலாறு ஒரு கர்ணபரம்பரைக்கதையாக வழக்கிலிருந்து வருகின்றது. கண்ணகி மதுரையை எரித்த பின்னர் கடல்கடந்து இலங்கைக்கு வந்து, பல இடங்களிலும் தங்கி இறுதியில் செட்டிபாளையத்திற்கு வந்து கிளைபரப்பி நின்ற வம்மி மரத்தடியில், வன்னிச்சியார் என்ற பெயருடன் வசித்ததாகவும், இவருடன் செட்டிபாளையத்திலே வாழ்ந்த செட்டிச்சியார் என்ற வணிகர்குலப்பெண் நட்புக்கொண்டு, உச்சிப்பொழுதிலே உணவு முதலியவற்றை இவருக்கு அளித்து வந்துள்ளார். ஒரு வைகாசித் திங்களில்
மாலைநேரம் வன்னிச்சியார் தலைமுடியை அவிழ்து உலரவைத்துக்கொண்டிருந்தபோது செட்டிச்சியார் அங்கு சென்றுள்ளார். அவிழ்ந்து கிடந்த தலையிலே பேன் பார்க்கும்படி வன்னிச்சியார் செட்டிச்சியாரைக் கேட்டதாகவும், அவ்வாறே செய்ய, வன்னிச்சியார் தலையிலே ஆயிரங்கண்கள் இருப்பதைக் கண்டு செட்டிச்சியார் அதிசயப்பட, "வைகாசித் திங்களில் வருவேன்" எனக் கூறி, வன்னிச்சியார் மறைந்ததாகவும் கர்ணபரம்பரையான கதை வழக்கிலுள்ளது. ஆலயம் அமைப்பதற்கு கண்ணகி அம்மனே நிலையம் எடுத்து வேப்பிலைகளினால் அடையாளப்படுத்தியதாகவும் வாய்மொழியான கதை நிலவுகின்றது.

ஆலயம் அமைப்பதற்கு நிலையம் அமைத்துக் கொடுத்ததோடு, அடிக்கல் நாட்டவேண்டிய சுபநேரத்தை அறிவிப்பதற்குக் கடலிலே பெரிய வெடிச்சத்தம் கேட்கும் எனவும், அவ்வேளையில் பூசைசெய்பவரே கல்வைக்கவேண்டும் என அம்மன் கட்டளையிட்டாராம். இவ்வாறு எழும் சத்தத்தினைக் கேட்டு அறிவிப்பதற்கென்று கடற்கரையிலிருந்து அம்மன் கோவில்வரை பாதையொன்று திறக்கப்பட்டதாகவும், களுதாவளை தொடக்கம் கிரான்குளம் வரையுள்ள் மக்கள் இச்சத்தம் கேட்டு அறிவிப்பதற்கு வரிசையில் நின்றதாகவும், வெடிச்சத்தம் கோயிலடியில் நின்ற ஒரு சிலருக்கு மட்டுமே கேட்டதாகவும் கூறுவர். இக்காரணத்தினாலேயே இந்த ஊர்கள் செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோவிலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டனவாகக் காணப்படுகின்றன.

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோவில்பற்றிய பல சுவையான குறிப்புக்களை மட்டக்களப்பு மான்மியத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். மட்டக்களப்பு மான்மியம் என்பது பழமையான வரலாற்றுக்குறிப்புக்களைத் தன்னகத்தேகொண்ட ஏட்டுச்சுவடியாகும். செட்டிபாளையத்தைச் சேர்ந்த புலவர் இ.வ. கணபதிப்பிள்ளை அவர்கள் தம்மிடமிருந்த ஏட்டுச்சுவடியை, மகாவித்வான் எவ்.எக்ஸ்.சி. நடராஜா அவர்களிடம் கொடுத்துள்ளார். இப்பெரியவர் மட்டக்களப்பு மான்மியம் என்ற ஏட்டுச்சுவடியை நூலாகப் பதிப்பித்து உதவியுள்ளார். இந்த நூலிலே செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோவில் பற்றிய பல தகவல்கள் காணப்படுகின்றன.

கி.பி 1505 ஆம் ஆண்டு அந்நியர்கள் இலங்கையுள் காலடி எடுத்து வைத்தபொழுது, இலங்கைத்தீவு, அரசர்களால் ஆளப்பட்ட
நாடாகவே காணப்பட்டது. மதப்பிரசாரம், வியாபாரம் போன்ற நோக்கங்களைக் கருத்திற்கொண்டு கீழைத்தேசங்கள்மீது நோட்டம் விட்ட மேலைநாட்டினர், இயற்கைவளம் நிறைந்த நாடுகளைத் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவது அவசியமென உணர்ந்தனர். போத்துக்கீசர் யாழ்ப்பாணப்பிரதேசத்தை ஆட்சி செய்தபோது, சைவ ஆலயங்களை அழித்து, மக்களைக் கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்தனர். சைவசமயத்தின்மீது பக்தியும் பற்றும் கொண்டோர் ஊரைவிட்டோடினர். யாழ்ப்பாணத்திலே ஒத்துக்குடாவில் கந்தப்பர் என்பவர் செல்வாக்குடையவராகவும், சைவசமயத்தின்மீது ஆழ்ந்த பக்திகொண்டவராகவும் விளங்கினார். இவருக்கு மயிலியர், செம்பியர் என்ற இரு சகோதரிகளும், சுங்குமுத்து என்ற மகளும் இருந்தனர்.

இவ்வேளையில் இலங்கையின் பல பாகங்களிலும் தமது மதத்தையும் அதிகாரத்தையும் பரப்ப விரும்பிய போத்துக்கேயர், மட்டக்களப்பிலும் கால்கொண்டனர். இத்தருணத்தில் கண்டியை ஆண்ட விமலதருமன் என்னும் அரசன் இவர்களை அடக்கி, மட்டக்களப்பை கண்டி நகரத்தின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்துள்ளான். இவ்வாறு கண்டி அரசன் போத்துக்கேயருக்கு எதிராக இருப்பதை அறிந்த யாழ்ப்பாணத்து சைவசமயிகள் சிலர், ஒத்துக்குடா கந்தப்பரிடம் சென்று, யாழ்பாணத்தில் போத்துக்கேயரின் கெடுபிடிகளைத் தெரிவித்து, அங்குள்ள கண்ணகி அம்மன் விக்கிரகங்களை மட்டக்களப்பிற்குக் கொண்ட செல்ல உதவும்படி வேண்டுகோள் விடுத்தனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்ற ஒத்துக்குடா கந்தப்பர், தனது குடும்பத்தினருடன் ஏழு கண்ணகி அம்மன் விக்கிரகங்களையும், மூன்று வைரவர் விக்கிரகங்களையும், பணிசெய்வோரையும் படகிலேற்றி, மட்டக்களப்பு மண்முனைக்கு அருகில் இறங்கி, மண்முனைக்கு அடுத்து ஒரு கிராமம் அமைத்து சிறாம்பி (காவற்பரண்) கட்டி, விக்கிரகங்களைச் சிறாம்பியில் இருத்தி, பணிபுரிவோரை அருகில் இருத்தி மாளிகை அமைத்து வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு கிராமம் அமைத்துக் குடிபெயர்ந்த ஒத்துக்குடா கந்தப்பரை, போத்துக்கீயரின் உளவாளியெனத் தவறாகப்புரிந்து கொண்ட மட்டக்களப்புத் திக்கதிபன், கண்டியரசனுக்குத் தவறான தகவல்களைக் கொடுத்தான். திக்கதிபனின் பேச்சை உண்மையெனத் தவறாக எண்ணிய கண்டி அரசனின் கட்டளைப்படி, ஒத்துக்குடா கந்தப்பரின் குடும்பம், மட்டக்களப்பு வாவியிலே அழிழ்த்திக் கொல்லப்பட்டது. இவரது மறைவின் பின் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவந்த ஏழு கண்ணகி விக்கிரகங்களில் ஒன்றை இருந்த இடத்திலேயே வைத்தனர். ஏனைய ஆறு கண்ணகி விக்கிரகங்களையும் ஆறு பிரதான ஊர்களில் வைத்தனர். கொலை செய்யப்பட்ட ஒத்துக்குடா கந்தப்பரின் பிரேதம் ஒதுங்கிய இடம் ஒத்துக்குடா எனச் செட்டிபாளையத்திலும், சிறாம்பிகட்டி கண்ணகி சிலைகளை வைத்திருந்த இடம் கிரான்குளத்தில் சிறாம்பியடி எனவும், அழைக்கப்பட்டது.

**- வளரும்...**



மலேசிய மடல்

# விலைவைத்து வாங்கவா முடியும் பரமனருளை? உயிர்நீத்த உடலுக்காகவா திருமுறைப் பாடல்?

## தமிழும் சைவமும் மிளிர்ந்த பத்துமலையில் சரவணன் வினாக் கணைகள்!



நக்கீரன்

**கோ**லாலம்பூர், பிப்.19:

மலேசிய இந்து சங்கத்தின் சமய விழாக்களுள் தலையாய நிகழ்வான தேசியத் திருமுறை விழா 44-ஆவது தடவையாக இன்று பிப்ரவரி 19-ஆம் நாள் பத்துமலை தமிழ்ப் பள்ளி வளாகத்தில் தமிழும் சைவமும் மிளிரும் வண்ணம் நடைபெற்றது.



“சிவநெறிச் செல்வர்” தங்க கணேசன் தலைமையேற்று, முதல் முறையாக நடைபெற்ற இந்த விழாவில் அரசியல்வாதியா-இலக்கியவாதியா-சமயவாதியா என்று அடையாளம் காணமுடியாத டத்தோஸ்ரீ மு.சரவணன், பிற்பகலில் நடைபெற்ற 2-ஆவது அங்கத்தை தொடங்கி வைக்குமுன் ஆற்றிய சிறப்புரை தேர்ந்த சமய உரையாகவும் திருமுறை நெஞ்சத்தினரின் உள்ளத்தை வருடிய நன்னெறிக் கருத்துரையாகவும் அமைந்தது.

தமிழினத்திற்கு கோடரிக் காம்பாக இருந்தாலும் இலக்கியத் தமிழுக்கு பூங்கொத்தாக விளங்கும் கம்பராமாயணத்தை யாத்த கம்பனைப் போற்றுவார் சரவணன் கம்பதாசனாம் கண்ணதாசனையும் புகழ்வார் இவர் கந்தனுக்கும் சரணம் பாடும் சரவணன், காவடி சுமந்து ஆடவும் செய்வார் கந்தனின் தந்தை பரமனையும் போற்றுவார் என்பது இன்று தெரிந்தது.



உலகாளும் அன்னை உமையவளின் ஒருபாகமாக நின்றாடும் சிவபெருமானே நேரில் வந்து தங்களை ஆட்கொள்ளும் அளவுக்கு அன்றாடம் தொண்டறம் புரிந்தது ஒருபுறமிருக்க, ஒருகால் அல்ல் இருகால் அல்ல் ஊனோடு உயிர் ஒட்டியிருக்கும் எக்காலமும் சிவனை நினைந்து நினைந்து நல்ல தமிழில் பாடியவர்கள் அடியார்கள் எனப்படும் நாயன்மார் பெருமக்கள்.

அத்தகைய ஆன்றோரர், பரம்பொருளர் சிவனை நினைந்து நினைந்து உள்ளம் உருகிப் பாடிய திருமுறைப் பாடல்களை, இறப்பு வீட்டிலும் உயிர்நீத்த உடலத்தின் அருகிலும் பாடுவதற்கென முறைமை கண்ட இன்றைய சமயப் போக்கு சரிதானா என்று ஆயிரக் கணக்கில் திரண்டிருந்த திருமுறைத் திருக்கூட்டத்தினரைப் பார்த்து வினாத் தொடுத்த சரவணன், இவற்றை யெல்லாம் சீர்படுத்த வேண்டிய அருங்கடமை இந்து சங்கத்திற்கு இருக்கிறது என்றார்.

தவிர, செல்வாக்கினாலோ அல்லது அதிகாரத்தினாலோ இறையருளை ஒருவராலும் பெற்றுவிட முடியாது துதிபாடலிலும் பரிகாரத்திலும் மயங்காத அவனருளை விலைவைத்து வாங்கவும் முடியாது என்பதற்கு 63 நாயன்மாரில் ஒருவரான பூசலார் நாயனாரின் ஆன்மிகப் பயணம் தெளிவாக விளக்குகிறது என்றார் சரவணன்.

காஞ்சி மாநகரை தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த பல்லவ மன்னனான காடவர்கோன், அரும்பாடுபட்டு ஒரு சிவ தலத்தை உருவாக்கினான். திருப்பணி யாவும் நிறைவுற்று, திருக்குட நன்னீராட்டு விழாவிற்காக பொருத்தமான நாளை உறுதிசெய்தபின் பரம்பொருளரின் திருவுள ஒப்புகைக்காகக் காத்திருந்த வேளையில், காடவர்கோனின் கனவில் வந்த சிவபெருமான், இதே நாளில் வேறொரு தலத்தில் காட்சியளிக்க நான் செல்ல வேண்டி இருப்பதால், மன்னா நீ, இன்னொரு நாளை உறுதிசெய்து கொள் என்றார்.

நின்னாட்சிக்கு உட்பட்ட திருநின்றவூரில் பூசலார் என்பவர் எனக்காக ஒரு மாளிகை எழுப்பி இருப்பதுடன், நீ குறிப்பிடும் அதே நாளில் பூசலார் முன்னதாகவே ஒப்புதல் பெற்றுள்ளதால் நான் அங்குதான் செல்ல இருக்கிறேன் என்றும் சொல்லிவிட்டு மறைந்தாராம்.



இது கனவாகவும் தெரியவில்லை நினைவாகவும் புரியவில்லையே என்று உறக்கத்தையும் இருப்பையும் தொலைத்து பரிதவித்த காடவர்கோன், பொழுது புலர்வதற்கு முன்பே திருநின்றவூருக்கு சென்று, அங்கு புதிதாக எழுப்பப்பட்டுள்ள சிவதலம் எங்கே இருக்கிறதென்று தேடித்தேடி அலைந்தும், ஓரிடத்திலும் அத்தகைய புத்தாலயத்தை காடவர்கோனால் காணமுடியவில்லை.

வேறுவழியின்றி பூசலாரின் இருப்பிடம் தேடி, அவரை அழைத்தபோது, பூசலாரோ “தம்முடைய் இருப்பிடத்தைத் தேடி மன்னரே வந்திருக்கின்றாரே” என்று பதற்றமும் அச்சமும் ஒருசேர மனதைப் பற்றிய வண்ணம் மன்னர்முன் வந்து நின்றதும்.

“எங்கே நீ எழுப்பிய ஆலயம்?” என்று மன்னன் அதட்டியுள்ளான்.

மன்னர்கோனே, “என் அன்றாட வாழ்வில் சிவனடியார்களுக்கு எளிய தொண்டாற்றி வந்த வேளையில், இதே ஊரில் லிங்கத் திருமேனியாக எழுந்தருளியிருந்த ஈசனுக்குக் கூரையில்லாததால், அகிலம் படைத்த அந்த ஆலவாயனுக்கு ஓர் ஆலயம் எழுப்ப விரும்பினேன். ஆனால், என்னிடம் போதிய பொருள் இன்மையால், அதைத் தேடி அலைந்தேன். ஒருவழியும் புலப்படாமல், உடலும் உள்ளமும் சோர்ந்து நின்றேன் அப்போது, ஈசன் என் மனத்தில் தன் திருமேனி தோன்ற நின்றார். அதனால், “புறத்தே கோயில் எழுப்பத்தானே பொருள் தேவை. இனி அகத்தே அவனை நிறுத்திக் கோயில் எழுப்புவோம்” என்று முடிவு செய்து என் உள்ளத்தில்தான் பார்த்துப் பார்த்து கோயில் கட்டி இருக்கிறேன். திருப்பணி யாவும் நிறைவுப்பெற்று, இப்பொழுது பரம்பொருள் காட்சி தரவும் சித்தம் இசைந்துள்ளார் இதுதான் நடந்தவை” என்று பூசலார் சொன்னதும் மன்னர் காடவர்கோன், உடனே பூசலாரின் திருவடியைத் தொழுது அரண்மனைக்குத் திரும்பினான் என்பது, பூசலார் நாயனாரின் வாழ்க்கை;

இந்த ஆன்மிக வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது பாடம், சிவனை வழிபாட்டு நாயகனாகக் கொண்ட திருமுறைக் கூட்டத்தினர், புறவழிபாட்டைக் காட்டிலும் அகவழிபாட்டில் அக்கறைக் கொள்ளுதல் நலம் என்று பேசினார் சரவணன்.

மலேசிய இந்து சங்கத்திற்கு ஒரு நல்ல தலைவராக “சிவநெறிச் செல்வர்” தங்க கணேசன் வாய்த்திருக்கிறார். இவரின் தலைமையில், மலேசிய இந்து சங்கம் இன்னும் சிறப்பாக வளர்ச்சி காண வேண்டும் அதற்கு ஏதுவாக, இந்து சங்கத்தில் பாடம் கற்ற மாணவனான தாமும் மலேசிய இந்தியர் காங்கிரஸ் அரசியல் இயக்கமும் பொருளாதார அடிப்படையிலும் இன்னும் பிற வகையிலும் தேவையானவற்றைச் செய்வோம் என்று சரவணன் உறுதி அளித்தார்.

மஇகா முன்னாள் தலைவர் டான்ஸ்ரீ டாக்டர் ச.சுப்பிரமணியமும் இதில் கலந்து கொண்டார்.

முன்னதாக, காலை நிகழ்ச்சியில் பினாங்கு துணை முதல்வரும் பினாங்கு இந்து அறப்பணி வாரியத் தலைவருமான பேராசிரியர் இராமசாமி கலந்து கொண்டு, இந்து சங்கத்தின் 44-ஆவது தேசியத் திருமுறை விழாவை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

மலேசிய இந்து சமுதாயத்திற்கு ஓர் அரணாகத் திகழ வேண்டிய கடப்பாடு, மலேசிய இந்து சங்கத்திற்கு இருக்கிறது. குறிப்பாக, எளிய மக்கள் எதிர்கொள்ளும் மதமாற்றம் உள்ளிட்ட சிக்கலைக் களைய இந்து சங்கம் போராட வேண்டும். சிவ வழிபாட்டிலும் கௌமார நாயகன் முருக வழிபாட்டிலும் நம்பிக்கை கொண்ட தாங்களும் இந்து சமய எல்லைக்கு உட்பட்டவர்கள்தான் என்று குறிப்பிட்ட பேராசிரியர் ப.இராமசாமி, புதிய தலைவர் தங்க கணேசன் தலைமையில் சிறப்பாக செயல்படும் மலேசிய இந்து சங்கத்திற்கு தங்களின் ஆதரவு எப்பொழுதும் உண்டு என்றும் குறிப்பிட்டார்.



நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# ஒரு காலை இழந்த ஜான்சி ராணிக்கு மருத்துவ–சமூக நல உதவி:

## நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் வருகையால் நெகிழ்ந்த குடும்பம்





**உ**லக மக்கள் தாய்மொழி நாளைக் கொண்டாடிக் கொண்டிருந்த இன்றைய நாள், கடுமையான இனிப்பு நீர் நோயால் பாதிக்கப்பட்டு இடக் காலை இழந்த ஜான்சி ராணி என்ற மலேசியத் தமிழ்ப் பெண்ணுக்கு மலேசிய மனித வள அமைச்சர் வ. சிவகுமார் மூலம் புதிய விடியல் பிறந்தது.

அரசமுறைப் பயணம் மேற்கொண்டு ஜகார்த்தாவிற்குச் சென்றிருந்த அமைச்சர், அங்கிருந்து நாடு திரும்பியதும் சிலாங்கூர் மாநிலம், கிள்ளான் தாமான் சொந்தோசாவைச் சேர்ந்த ஜான்சி ராணி இல்லத்திற்கு நேரடி வருகை புரிந்து, ஜான்சி ராணியிடம் நலம் விசாரித்தார்.

தொடர்ந்து, மனித வள அமைச்சின்கீழ் இயங்கும் சமூக நல பாதுகாப்பு நிறுவனம்-சொக்சோ’வின் மூலம் ஜான்சி ராணிக்கு செயற்கைக் கால் பொருத்தப்பட்டதோடு அவருக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டது. சொக்சோ’ கிள்ளான் மாவட்ட அதிகாரிகளும் அப்போது உடனிருந்தனர்.

சொக்சோ புனர்வாழ்வு மையத்தில் ஆறு மாத பயிற்சி பெறவும் ஜான்சி ராணிக்கு கடிதம் வழங்கப்பட்டது.

இளம் வயதில் ஒருகாலை இழந்ததால் எதிர்காலம் குறித்த கேள்விக்குறியுடனும் துயர மனநிலையிலும் இருந்த ஜான்சி ராணி, இனி புதுவாழ்வு பெறுவார் என்றும் சொக்சோ உதவியோடு அனைத்து உதவியையும் பெற்று பழைய நிலைக்குத் திரும்புவார் என்றும் மனித வள அமைச்சர் சிவகுமார் நம்பிக்கைத் தெரிவித்தார்.

மலாக்காவில் உள்ள சொக்சோ மறுவாழ்வு மையத்தில் பயிற்சி பெற்ற பிறகு அவரை மீண்டும் வேலைக்கு அமர்த்தி கொள்வதற்கு “சிட்டி லிங் எக்ஸ்பிரஸ்” நிறுவனம் முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது என்றும் சிவகுமார் குறிப்பிட்டார்.

இந்த வேளையில், சிலாங்கூர் சட்டமன்ற சொந்தோசா தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முனைவர்ர் குணராஜ் ஜோர்ஜ் உடன் இருந்தார்.

தக்க நேரத்தில் தன் இல்லம் தேடி வந்து உதவி வழங்கிய மனித வள அமைச்சர் சிவகுமாருக்கும் சொக்சோ நிறுவனத்திற்கும் ஜான்சி ராணி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# அன்பின் தொனி - 681

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளைவணங்காதே** - Worship not the Creations

**உன்னைபடைத்தவரைவணங்கு** - Worship your Creator

அன்பானவர்களே!

இவ்வளவான அதிகாரத்தையும் வல்லமையையும் தேவன்தாமே அவரது பிள்ளைகளாகிய எமக்குத் தந்திருக்கும்போது, நாம் உலகஞானிகளின் பாவமான, தேவனுக்குப் பிரியமில்லாத, சத்தியத்திற்குப் புறம்பான ஆலோசனைகட்கு இடங்கொடாதபடி ஜீவிக்க, தேவ ஆவியானவரின் வழிநடத்துதலோடுவாழக் கற்றுக்கொள்வோம். மேலும் உலகஞானத் தைக் குறித்து பரிசுத்தவேதாகமம் கீழ்க்கண்ட வாறுவிபரிக்கிறது:

ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்குக் கிறிஸ்து தேவ பெலனும் தேவஞானமுமாயிருக்கிறார். இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது, தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிகபலமாயிருக்கிறது. எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள், மாம்சத்தின்படிஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமான வைகளைத் தெரிந்துகொண்டார், பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவை களையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். அந்தப்படி, நீங்கள் அவராலேகிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரேதேவனால் நமக்குஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். **- 1 கொரிந்தியர் 1: 24-31**

சத்தியத்தை அறிந்தநாம் ஒருவரைஒருவர் நேசிப்போம், அன்புகாட்டுவோம், இரங்கிமற்றவர்களுக்காக பாரத்தோடு ஜெபிப் போம், இரக்கத்திற்கும் கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்பதை நிரூபிப்போம்.

**கருச் சிதைவு** - Abortion

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். **- சங்கீதம் - 127: 3**

பிள்ளைகள் கர்த்தரால் கிடைக்கும் ஒரு ஆசீர்வாதம். திருமணமாகிய அநேகதம்பதிகளுக்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லாமல் ஏங்கிக் கிடக்கின்றனர். அப்படிப்பட்ட குழந்தை இல்லாத நிலையில் இருக்கும் கிறிஸ்தவர்கள் அன்னாளைப் போல தேவனுடைய பாதத்தில் உபவாசத்தோடும் கண்ணீரோடும் காத்திருந்து தேவனுடைய பெரிதானகிருபையினாலே காலங்கள் தாமதித்தாலும் பிள்ளைகளைப் பெற்று சந்தோஷமாய் வாழ்ந்த, வாழ்கின்ற சம்பவங்கள் ஏராளம் ஏராளம். இப்படியாக ஒரு சாரார் பிள்ளைகளுக்காகத் தவித்துத் தவம் கிடக்கின்றபோது, இன்னுமொரு சாரார் கடவுள் அவர்களுக்குக் கிருபையாகக் கிடைத்த குழந்தைப்பேறை, தாயின் கற்பத்தில் அச்சிசுகருவாய் இருக்கும்போதே அதைச் சிதைத்துவிடுகின்றனர்.

பத்துமாதங்களில் தாயின் கற்பத்தில் கருக்கட்டிவளர் சிசியடையும் சிசு, ஒரு குழந்தையாக இவ்வுலகில் பிறந்துவளர்ந்து, அதனூடாக இன்னுமொரு பரம்பரையை உருவாக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. அப்டியாக ஒருவர் கற்பத்தில் வளரும் சிசுவை மருந்துகள் மூலாகவோ, அல்லது வேறு மருத்துவ சிகிச்சகள் மூலமாகவோ அழித்துவிடுகிறார்கள். அது ஒரு கொலை என்பதை உணராதபடி தமது சுய விருப்புவெறுப்புக் காரணங்களுக்காக சிலர் அதைத் துணிகரமாகச் செய்வதை இன்று சர்வசாதாரணமாக உலகெங்கும் காணக்கூடியதாய் இருக்கிறது. இதன்மூலம் ஒரு சமுதாயத்தையே அவர்கள் அழிக்கிறார்கள் என்பதை சற்றும் சிந்திப்பதே இல்லை.

மேலும் சிசுச் சிதைவை (Abortion) நியாயப்படுத்தி, அது அச்சிசுவைச் சுமக்கும் தாயின் சுதந்திரம், அதைவளர்ப்பதா அல்லது அழிப்பதா என்பது அவரவருடைய தனிப்பட்ட தீர்மானம் என்றும், அது மனித உரிமை என்றெல்லாம் வாதாடி, அதற்கு ஆதரவாக ஒரு கூட்டத்தாரையும், அதை எதிர்த்து அது கொலை என்றும், வாய் பேசாத, வாதிடமுடியாத நிலையில் இருக்கும் ஒரு உயிருள்ள சிசுவை அழித்துவிடுவது பாவச்செயல் என்றும் கூக்குரல் எழுப்பும் இன்னுமொரு கூட்டத்தாரையும் இன்று உலகெங்கும் காணலாம். இன்னும் சிலர் சிசு அழிப்பை அரசாங்கம் சட்டபூர்வாக அனுமதிக்க வேண்டும் என்று சிலநாடுகளில் பகிரங்கமாகக் கோருவதும், வேறுசிலர் அதை எதிர்த்து சிசுச் சிதைவை சட்டபூர்வமாகத் தடைசெய்ய வேண்டுமென்றும் வாதாடுவதையும் பலதேசங்களில் இன்று காணக்கூடியதாய் இருக்கிறது. இதை ஆதரிப்பதும், எதிர்ப்பதுமான நிலை நாளுக்குநாள் உலகம் பூராவும் அதிகரித்துக்கொண்டேவருகிறது. இந்தநிலையில் பரிசுத்தவேதாகமம் கூறுவதைக் கவனிப்போம்:

கொலை செய்யாதிருப்பாயாக **- யாத்திராகமம்- 20: 13**

கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். **- மத்தேயு 5: 21**

சட்டபூர்வமாகத் திருமணமான தம்பதிகளும் அவர்களுக்குத் தேவகிருபையால் கிடைத் தகுழந்தையை, தாயின் வயிற்றில் சிசுவாகவளரும் ஆரம்பமாதங்களிலேயே அழித்துவிடுகிறார்கள். அதேபோல திருமணமாகாத சிலயுவதிகள் தவறானபாலியல் உறவினால் உண்டான கற்பப்பேறை அவர்களும் அப்படியே அழித்துவிடுகின்றனர். இதனால் அவர்கள் பாவத்திற்கு மேல் பாவத்தைச்செய்து தமது அழிவைதாமே தேடிக்கொள்கின்றனர். ஒருவருடைய கற்பத்தில் வளரும் சிசு எமதுகண்களுக்குக் காணமுடியாவிட்டாலும் அது வளர்ச்சிஅடைகிற ஒரு உயிர் என்பதைநாம் மறந்துவிடக் கூடாது. எனவே சிசுச்சிதைவு ஒரு கொலை என்பதை அறிந்து நாம் அதற்கு அமைய எமது குடும்ப வாழ்க்கையைத் தேவசித்தத்தோடு நடத்தக் கற்றுக்கொள்வோம், தேவனைப் பிரியப்படுத்தி ஜீவிப்போம்.

**தொடரும்...**



# இவ்வார ராசிபலன்

**24-02-2023 வெள்ளி தொடக்கம் 02-03-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். பூமியால் லாபம் உண்டு. போட்டி, பொறாமைகள் விலகும். புதிய சிந்தனை உருவாகும். விவசாய விளைச்சல் மூலம் நற்பலன் உண்டாகும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். வில்லங்கள் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல் வாய்ப்புக்கள் நாடி வரும். மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் கொடுக்கும். உபயோகமான தருணம். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். ஆலய தரிசனம் அமைதி தரும். காரிய வெற்றி கிட்டும். வாழ்க்கை வசதி பெருகும். வீண் வம்பு ஓடி மறையும். ஆரோக்யம் திருப்தி தரும். வழக்கு வெற்றி தரும். புத்தி வழியில் தொல்லை உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. கடன் பிரச்சனை தீர்வு உண்டு. வியாபாரத்தால் நன்மை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகளால் பெருமை உண்டு. மருத்துவச் செலவு ஏற்படும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். பங்குச்சந்தை வியாபாரம் லாபம் தரும். புத்துணர்வோடு செயல்படுவீர். வாய்பேச்சில் கவனம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 3,5,7,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,A




**ரிஷபம்:** பணவரவு கிடைக்கும் வாரம். மனம் மகிழும் காலம். உள்ளம் பூரிப்படையும். மனைவியால் அமைதி கெடும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி கிடைக்கும். பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுபக்காரியச் செய்தி வரும். வேலைத்திறன் அதிகரிக்கும். அலைச்சலால் அசதி ஏற்படும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கிடைக்கும். வெளியூர் பயணம் உண்டு. விவேகம் வெளிப்படும். வீண் செலவு ஏற்படும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். குதூகலமான மனநிலை காணப்படும். பழையக்கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சாதனை படைக்கும் காலம். பாராட்டுக்கள் உயரும். புதிய தொழில் அமையும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசை ஆர்வம் கூடும். எதிரிப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கல்வியில் கவனம் தேவை. பூர்வீக சொத்து கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். உறவினர் வருகை உண்டு. திடீர் செலவு ஏற்படும். விருப்பமான தொழில் அமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,5,7,8
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,L




**மிதுனம்:** தொட்டது துலங்கும் வாரம். எண்ணம் கைகூடும். காரியத்தடை ஏற்படும். கடன் அதிகமாகும். பேச்சில் பணிவு தேவை. திட்டமிட்ட செயல் வெற்றிபெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. உறவினர் வருகை உண்டு. அத்தியாவசிய செலவு அதிகமாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். புதிய கடன் ஏற்படும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். எதிரிகளின் தொல்லைக் குறையும். பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் உருவாகும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். பணிவும், துணிவும் கூடும். பணியில் உயர்வு கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். இடமாற்றம் நன்மை தரும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். தொல்லைத் தந்தவர் விலகிடுவர். வங்கி சேமிப்பு உயரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,K




**கடகம்:** புண்ணியம் சேரும் வாரம். மனநிறைவு உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலை காணப்படும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். பண நடமாட்டம் கூடும். செய்தொழில் சிறப்படையும். பெண்களுக்கு மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். தகுதிகள் மிகுதியாகும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,D




**சிம்மம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். மனோ பயம் அகலும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்க வரும். பழைய பகை தீரும். வெற்றிச் செய்தி வரும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு பெருகும். பழையக் கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச்சேர்க்கை உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. செல்வாக்கு மேம்படும். பணம் புரளும். குடும்ப வளர்ச்சி பெருகும். புதுமையை விரும்புவீர்கள். வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்புக்கள் மாறும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் ஒழியும். கண் நோய் வந்து போகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். யோக பலன் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நடராஜப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,H




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**கன்னி:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். பொறுப்புக்கள் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் பலன் தரும். வெளிநாட்டு பயணம் உருவாகும். வியாபாரம் அபிவிருத்தியாகும். வீண் விரயம் தவிர்க்கவும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குடும்ப உறவு பலப்படும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். வணிகத்தொழில் விரிவடையும். பயணம் தடைப்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவு திருப்தி தரும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். விரும்பிய பொருள் கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். விபரீத எண்ணம் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,C




**துலாம்:** ஆசைப்பட்ட பொருள் வாங்கும் வாரம். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வாய்ப்பு வரும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. குடும்பச் சுமை கூடும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். ஆண்களின் அதிகாரம் உயரும். பணி செய்யும் இடத்தில் பாராட்டுக்கள் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவார்கள். சுறுசுறுப்பு அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு உண்டு. வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். வியாபாரம் சிறக்கும். தாய் நலனில் அக்கறை தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகனச் செலவு ஏற்படும். உலோகத் தொழில் லாபம் தரும். கடன் பிரச்சனை தீரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். வளமான வாழ்வு அமையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குலதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,I




**விருச்சிகம்:** விரக்திகள் மறையும் வாரம். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். காதல் எண்ணம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். பொன், பொருள் சேரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். விருப்பமான தொழில் அமையும். வருமான வாய்ப்பு கூடி வரும். கல்வி ஆர்வம் கூடும். அன்னதானம் செய்வதால் ஆரோக்கியம் கூடும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வு நல்லது. முயற்சிகள் பலன் தரும். மருத்துவச் செலவுகள் உண்டு. பொருளாதாரம் உயரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பதவி உயர்வு வரும். வருமானம் கைகூடி வரும். நண்பர்களால் நன்மையுண்டு. பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். பொன்னான நேரங்களாக அமையும். திருடு போன பொருள் திரும்ப கிடைக்கும். அணிகலன் ஆர்வம் கூடும். தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். கர்மவினைகள் அகலும். கவனமுடன் செயல்பட வேண்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,2,4,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**தனுசு:** குதூகலம் தாண்டவமாடும் வாரம். பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்து கொள்வீர்கள். புது தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். சமூக ஆர்வம் கூடும். மற்றவரிடம் பழகும் விதம் அன்பாக இருக்கும். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லா மனபயங்கள் நீங்கும். உற்சாகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். பங்குச்சந்தையில் லாபம் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் கூடும். அன்றாட நாட்கள் மனமகிழ்ச்சியை தரும். சீரான வாழ்வமையும். சிந்தனைகள் மேலோங்கும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். குடும்ப கௌரவம் உயரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். வராத கடன் வந்து சேரும். பொறியியல் துறை லாபம் தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். பழையக்கடன் தீரும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**மகரம்:** மனிதநேயம் மிகுதியாகும் வாரம். தான தர்மங்கள் பலன் தரும். வீண் வம்பு உருவாகும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய் வழி உறவில் கவனம் தேவை. வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. எதார்த்தமாக செயல்படவும். பட்டம் பதவி தேடி வரும். பெண்வழிப் பிரச்சனைகள் முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும். கௌரவம் உயரும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். நன்மைகள் நாடி வரும். வம்புதும்புக்கள் ஒழியும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பழைய கடன் அடையும். வீண் வம்பு விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலு மங்கை, அதிர்ஷ்ட எண்: 9,8,5,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,E

*(தொடர்ச்சி 26 பக்கம்)*

## 30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

# ஸ்காபுறோ சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லரை விற்பனையாளர்கள், தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

## இனிய புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

tasty தமிழா ™ TASTY தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்



Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.

காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)



# SRI MARIYAMMA ASTROLOGER & JOTHIDAM

## World Famous Indian Astrologer



## Pandit: Guruji Arjunraj

Specialist in palm, Face & Photo, Horoscope Reading

**Most Powerful Spiritualist from India**

**ARE YOUR DEPRESSED LONELY?**

**I will remove and destroy all Bad Luck, Withcraft, Obeya, Jado, Voodo & Protect your From all evils.**

# 416-722-9498



OPEN7 DAYS 9AM - 8PM

**All RELIGIONS WELCOME! & PRIVATE AND CONFIDENTAL**

I will read your past, present and future by reading your palm and face. We attained this study since 300 years in our family from fathers and forefathers. I will read the influence of effects of sun moon stars and planets on its events on your life. Please try you visit me regarding your health, family, Business, Job, Child, Astrology Vasthu,Dhrusti, Enemy,Court, Marriage, Love, Education and detailed reading and Visa all matters. I can solve it if your have any difficulty or struggle in your life then your life will be successful and bright. Please meet me once and know your readings.

- Name & Date Birth
- Hand Reading
- Past, Present and Future
- Overseas & Travel
- Marriage, Family Matters
- Husband & wife
- Children Education
- Children Mistake
- Property Court
- Enemy Problem

- **Face Reading**
- **Horoscope**
- **Education & Work**
- **Love & Money Problem**
- **Divorce**
- **Sexual Problem**
- **Health & Business**
- **Jealousy & Black Magic**
- **Evill Affection**
- **Drinking Problem**

MEET ME ONCE & SEE YOUR LIFE CHANGE 100%, REMOVAL OF BLACK MAGIC & GIVE PROTECTION

**2607 Eglinton Ave, East Scarborough, ON M1K 2S2**

**(Eraa Super Market Upstairs, Unit #6) (Brimley & Eglinton)**

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** தர்ம சிந்தனை மேலோங்கும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். வேலைப்பளு கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு தும்புகள் ஒழியும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். காரியங்கள் கை கூடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி உண்டாகும். சகோதர வழியில் சகாயம் கிட்டும். வீட்டுத்தொல்லைகள் விலகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வியாபாரம் வெற்றித் தரும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் கவனம் தேவை. பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். காதலில் வெற்றி காண்பீர்கள். மூத்தோர்கள் மனக்குறை அகலும். குழப்பங்கள் நீங்கும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். ஆக்கப்பூர்வமான காலம். பித்தளைத் தொழில் லாபம் தரும். திருமண பேச்சு முடிவிற்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 6,4,9,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,R




**மீனம்:** நன்மைகள் நாடி வரும் வாரம். முன் கோபத்தை குறைக்க வேண்டும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெயர், புகழ், கௌரவம் உயரும். நோய் அகலும். எதிர்ப்புகள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்தொழில் வியாபாரம் சிறக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். பணப்புழக்கம் சரளமாகும். பெண்களின் விருப்பம் ஈடேறும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். கடன் பிரச்சனை தீரும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. வாகனச் செலவு ஏற்படும். மங்களச் செய்தி வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். சோதனைகள் நீங்கும். கனவு தொல்லை உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. காதலால் மகிழ்ச்சியுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் தரும். வியாபாரத்தால் நன்மை உண்டு. விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உளுந்து தானம் சிறந்த பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஈசப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 4,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,X

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 346
***** ***** ***** *****
கவிஞர் தியாரூ

இந்து இஸ்லாம் கிறித்தவம்
இணைந்தே வாழும் மகத்துவம்!
சொந்த மானோம் எல்லோரும்;
இதுதான் நமது தனித்துவம்!

நாட்டில் மதங்கள் என்னென்ன
நதிகள் மலைகள் அறியுமா!
வானில் பறக்கும் பறவைக்கு
வர்ண பேதம் தெரியுமா!

ஆற்று வெள்ளம் கடலிலே;
அணைக்கும் உள்ளம் அருகிலே!
தேற்றும் அன்பு விழியிலே
தழுவும் கைகள் உறவிலே!

மதங்கள் நமக்கு உடைபோலே;
மனிதம் நமது உயிராமே!
விதைக ளுக்கு மதமேது;
விருட்சக் கனிகள் வரம்தானே!



# கடந்தவையும் கடப்பவையும் (47)

கடந்து சென்ற பாதையெல்லாம்
நடந்தவையே கூட வர

ஒவ்வொன்றாய் நினைத்தபடி நன்கே
வந்து சேர்ந்தோம் வடமராட்சி

சொந்த இடக்காற்று சோக்காக
வந்தகளை தெரியாது வருடியது - அதுவும்

சில பொழுது வீசியது
பல பொழுது அடங்கியது

ஓரிலைகூட அசையாத நாளாக
இரு நட்கள் கடந்தாச்சு - இனி

இயலாது என்பதற்கு அன்றைய
தொடர் மின்வெட்டும் காரணமே

கடல் தேடிப் போவதற்கு
உடல் ஆரோக்கிய மிதிவண்டி

தனித் தனியே ஒவ்வொன்றாக
இனிமையாக இருந்ததுதான் ஓடுதற்கு

குன்றுமில்லை குழியுமில்லை நன்றிது
அன்றுபோல் துள்ளலும் இருக்கவில்லை - அங்கு

பாதையோரம் நிமிர்ந்த வீடுகள்
ஆரையும் காணவில்லை அதிகமங்கு - சிலவிடத்தில்

தாத்தாக்களும் பாட்டிகளும் தனித்தே
காத்திருந்தார் ஆட்தேடிக் கதைப்பதற்கு

காலடியில் காவல் நாய்களும்
போவோர் வருவோரைப் பார்த்திருக்க - சேர்ந்து

விளையாடும் சிறுவர்கள் வேறிடத்தில் - அதை
களையேதும் இல்லாது பார்ப்பவர்கள் - ஒருபுறத்தில்

ஒதுங்கி இடம் தருகிறார்
விலகி நாமும் போவதற்கு - பெரும்

வளைவுகொண்ட சிறிய பாதை
நினைவு படுத்த அவர்களையும்

நினைத்தபடி தொடருகிறோம் கடற்கரைக்கு

அன்று,

வெந்த புண்ணில் மயிலிறகால்
கந்தக மைபூச வந்தவர்கள்

தேர்ந்து எடுத்ததுவோ பெருவீதி
வந்த வேகத்தில் உள்நுழைந்தால்

அந்தநாள் இடியப்பச் சிக்கலே
வந்த பாதை மறந்துவிடும்

அந்தளவு குச்சொழுங்கை கொண்டவூர் - ஆனாலும்
எவ்வளவு செய்தார்கள் அங்கு

வில்லங்கமாய் வீடுகளுள் உட்புகுந்து
பொல்லாத விடயக்கள் செய்தவர்கள் - அந்த

எல்லைகளைத் தாண்டுதற்குள் விண்ணுலகம்
எல்லோருமாய் சென்றகதை பலவுமுண்டு

பின்னாளில் உள்ளூரில் முன்னேற
எந்நாளும் வரைபடம் கைகளில் - பக்கத்தில்

முகமூடி அணிந்த ஆட்காட்டிக் குருவிகளும்
அவர்களோடு அணிவகுத்துத் திரிந்தன

தலையாட்டிக் கலாச்சாரம் தலைதூக்க - அவர்க்கும்
வரக்கூடாது இருமலோ தும்மலோ என

தமக்கு விரும்பிய கடவுளிடம் - தம்
முறைக்கு முறை மன்றாடியவர்கள்

நின்ற பாதைகளையும் கடந்த போது
வந்தது அந்தக் கடற்கரை...

(தொடரும்)

-- உமா மோகன் - Montreal- Canada --



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI
## Pawn Brokers



30
வருட சேவைகள்

## வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

## Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930
905-783-1895

உதயம் 1403 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 24, 2023

# யாழ் – பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசிய முன்னெடுப்புகளுக்கு அரணாக நின்றவர் பேராசிரியர் ரட்ணம் விக்னேஸ்வரன்

## இறுதி அஞ்சலியில் பத்தி எழுத்தாளரும், அவரது பழைய மாணவருமான ஐ.வி மகாசேனன். புகழாரம்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசிய முன்னெடுப்புகளுக்கு அரணாக நின்றவர் பேராசிரியர் ரட்ணம் விக்னேஸ்வரன் என நேற்று முன்தினம் இடம் பெற்ற அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்வின் போது பல்கலைக் கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெற்ற உரையரங்கில் உரையாற்றிய பத்தி எழுத்தாளரும் அவரது பழைய மாணவருமான, ஐ.வி மகாசேனன். புகழாரம் சூட்டினார்.
(உள்ளே 3ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# அவதூறுகள் பரப்பியதாக முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர் அஜித் சபாரத்தினம் தொடுத்த வழக்கில் எதிராளி முக தமிழ் – கணபதிப்பிள்ளை யோகநாதன் என்பவர் 1 இலட்சத்து 23 ஆயிரம் டாலர்கள் நஸ்ட ஈடு வழங்க நீதி மன்றம் உத்தரவு

கனடா தமிழ் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அஜித் சபாரத்தினம் அவர்கள் மீதான அவதூறுச் செய்திகள் மற்றும் குறிப்புகள் ஆகியவற்றை தனது சமூக ஊடகங்களினூடாக பரப்பியவர் என்றவகையில் எதிராளி முக தமிழ்-கணபதிப்பிள்ளை யோகநாதன் என்பவருக்கு எதிராக அஜித் சபாரத்தினம் அவர்கள் தொடுத்த வழக்கில் சில வருடங்களாக அந்த வழக்கை விசாரித்தஒன்ராறியோ உயர் நீதி மன்றம் இரு வேறு திகதிகளில் கூடி அஜித் சபாரத்தினத்திற்கு நட்ட ஈடாக மொத்தத் தொகையாக 123,000 (123K) பின்வரும் அடிப்படையில் கணபதிப்பிள்ளை யோகநாதன் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது .
(உள்ளே 3ம் பக்கத்தில் தொடர்ச்சி)



# மனோ சாட்சி

கொழும்பிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எழுதுகின்றார் – பகுதி – 5

## தலைப்பு: “கிளிநொச்சியில் பிரபாவுடன் சந்திப்பு”



- நோர்வேயை அவர் கூட்டி வந்து இருக்கலாம். ஆனால், நாங்கள் பேச வேண்டுமே என்று பிரபா சொன்னார்.
- கருணா அம்மானை எங்கே ஒளித்து வைத்திருக்கிறார்கள் என எங்களுக்கு தெரியும் என்றும் சொன்னார்.
- அவருடனான கடைசி சந்திப்பு என நான் அப்போது நினைக்கவில்லை.
- பிரபாவை அடுத்து, என் பார்வையை கவர்ந்தவர், பொட்டு அம்மான்.

(உள்ளே 2ம் பக்கத்தில் கட்டுரைத் தொடர்ச்சி)

# "நீதிமன்ற கட்டளையை மீறி குருந்தூர்மலையில் பௌத்த விகாரை"

## எமது யாழ் செய்தியாளர்



நீதிமன்றம் கட்டளை இட்டபின்பும் அதனை மீறி குருந்தூர்மலையில் பௌத்த கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதாக துரைராசா ரவிகரன் பொலிசில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குருந்தூர்மலையில் பௌத்த கட்டுமானப் பணிகள் இனி மேற்கொள்ளப்படவே கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றக் கட்டளையை மீறி அங்கு கட்டுமானப் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இப்பகுதியில் பொலீசார் பாதுகாப்புக்கடமையில் தொடர்ந்தும் ஈடுபட்டிருக்கும் நிலையிலும் அங்கே எவ்வாறு நீதிமன்ற கட்டளையை மீறி பௌத்த கட்டுமானப்பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன எனக் கேள்வி எழுப்பியே வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடொன்றினைப் பதிவுசெய்துள்ளார்.
(உள்ளே 17ம் பக்கத்தில் தொடர்ச்சி)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Realty Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136